1403

Registered No. M. 878.

5-MAR 1924

பூர்ணசந்திரோதயம்.

A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization.

தொகுதி 8 } 1917 ௵ மே௴ பிங்கள ௵ வைகாசி௴ { பகுதி 1

அ. ரங்கசாமி ஐயர், B.A.,B.L.,F.T.S, பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை.

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

பொருளடக்கம்

(CONTENTS)

		பக்கம்
1.	பத்திராதிபர் பக்கம்—Editor's page	1
2	தத்கால நிலைமை—ஆர். ரஙகஸ்வாமி ஐயர் பி.எ. Current events—R. Rangaswamy Iyer. B. A.	3
3.	பிரஹ்மக்ஞான தரிசனம் (பாலபாடம்)—வி. வெங்குசாமி ஐயர் Elements of Theosophy—V. Vengusamy Iyer	9
4.	சாந்தி—ஜகவீர பாண்டியன் Santi—Jagaveera Pandiyan	12
5.	நக்ஷத்திர பிரகாசம்—பி. எஸ். ராமசுப்பையர் Star light—B. S. Ramasubbier	15
6.	பெண்கல்வி—தி. யம். முகையதீன் கவிராயர் Female Education——T. M. Mohideen Kavirayar	19
7.	மீராபாய்—ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் யம். எ. Meerabai—R. Sreenivasa Aiyer, M. A.	25
8.	பகவத் பக்தியும் தேஜஸமும்—எ. நஞ்சுண்டப்பா Devotiouto God and Aura—A. Nanjundappa	31
9.	புத்தகவரவு—Review of Books	14, 24, 40

லோக குருவாகிய பரமர் வருவானேன்?

இதுவரை பூர்ணசந்திரோதயத்தில் தமிழில் வெளி வாரதது பிரஹ்மக்ஞான சபையாருள் ஸூக்ஷ்ம திருஷ்டி பெற்ற ஒரு வித்தகராகிய ஸ்ரீமான் லெட்பீடரவர்கள், விட்னீ கன்கார்டியா ஹாலில் ஓர் பெரிய ஜனத் திரளுக்குச் செய்த அரியதோர் உபந்யாஸம். ஜகத்குரு வரவேண்டியதற்கு தற்காலம் என்ன அவசியம் நேர்ந்தது என்று பல காரணங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இதன் விலை அணா ஒன்று தான். தபாற்கூலி பிரத்யேகம் ½ அணா. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு 1½ அணா, ஸ்டாம்பு மூலமனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

B. S. ராமசுப்பையர்.

பிரஹ்மக்ஞான மந்திரம்,

மதுரை.

பூர்ணசந்திரோதயம்.

A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization.

ஏழாந் தொகுதி.

1916ஸ்ு மேமீ முதல் 1917ஸ்ு ஏப்பிரல்மீ வரை
12 சஞ்சிகைகள் கொண்டது.

அ. ரங்கசாமி ஐயர், B.A.,B.L.,F.T.S, பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை.

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

விஷய அகராதி.

	பக்கம்.
அறஞ்செய விரும்பு—அசலாம்பிகையம்மாள் ...	54
ஆத்ம போதம்—யோகி சுத்தராராஜும்	240, 398, 434
இல்லற தருமம்—டி. யம். மொகையதீன்	307, 337, 371
உதயதிசை நக்ஷத்ரசங்கம்—ஓர் மெம்பர்	14
கீதா வாக்யங்கள்—ஆர். யஸ். நாராயண ஸ்வாமி ஐயர்	99, 138, 354, 377
கைங்கர்யப்பேச்சு மாத்திரம் போதாது—வி. அருணாசலம்	27
சன்மார்க்கம்—ஒட்டநத்தம் ஜகவீர பாண்டியன்	52
சாந்தம்—ஒட்டநத்தம் ஜகவீரபாண்டியன்	252
சமாசாரம்—	153, 241, 276, 321, 360, 401.
சிறுவர்க்குரிய விஷயம்—	272
சிறுவர்களுக்கு கடிதம்—	390
செய்ந்நன்றியறிதல்—ஏ. ஆர். ஸ்ரீநிவாஸ முதலியார்	319
தற்கால நிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர்	1, 41, 81, 121, 161, 203, 243, 283, 323, 356, 363, 402.
திருக்குறள் பொது நோக்காராய்ச்சி—யம். ஸ்வாமிநாதய்யர்	129
நக்ஷத்ர சேவகர்களின் சங்கம்—கே. யஸ். ராமச்சந்திர ஐயர்	428
பரோபகாரம்—ஆர். பஞ்சாபகேச ஐயர்	15, 73, 108,
பத்திரிகை வரவு—	120, 359
புத்தக வரவு—	119, 159, 200, 242, 281, 320.
பெண் கல்வி—தி. யம். முகையதீன் கவிராயர்	420
மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையின் 69-ஆம் ஆண்டு நிறைவு—அ. ரங்கஸ்வாமி ஐயர்	210
மிகச்சிறு குழந்தைகட்கு பிரஹ்மஞ்ஞானம் பி. குமரப்ப செட்டியார்	115, 178
மீராபாய்—ஆர். ஸ்ரீனிவாஸ ஐயர், யம். ஏ.	23, 65, 89, 169, 220, 252, 314, 347, 384, 411.
முக்கிய அறிவிப்பு—பி. எஸ். ராமசுப்பய்யர்	37

விஷய அகராதி.

மொழி பெயர்ப்புகள்:— பக்கம்

கல்வி கற்பித்தல் ஓர் கைங்கர்யம்—யம். ஸ்வாமிநாதையர் 33
Education as Service—J. Krishnamurthi

குருக்களும் சிஷ்யர்களும்—பி. எஸ். ராமசுப்பையர் 10

Masters & Pupils (Inner Life) C. W. Leadbeater 146, 155

குருநாதரின் ஸ்தூல சரீரம்— அ. ரங்கஸ்வாமி ஐயர் 294
Master's Physical Body—C. W. Leadbeater.

சாந்தமென்பது பலஹீனமல்ல—வஸந்தானந்தன் 272
Gentleness is not softness—Lotus Buds' Journal

பிரசீன சமயாசாரங்களும் தற்கால அவசியங்களும் ஆர் ஸ்ரீநிவாஸ ஐயர் 191
Old Creeds & New Needs—C Jinarajadasa

பிரஹ்மக்ஞான ஸபையின் அறைகள்—ஆர். பஞ்சாபகேச ஐயர் 95
Theosophical Lodge Room—C. Jinarajadasa

பிரஹ்மக்ஞான தரிசனம் (பாலபாடம்) வி. வெங்குஸ்வாமி ஐயர் 267

Theosophy for Beginners—C. W. Christie 304, 344, 374, 425.

ரவீந்திரநாததாகோரின் சரித்திரம்—ராகவையர் 60, 141.
Rabindranath Tagore—Herald of the Star.

வைசாக பௌர்ணமி—பி. எஸ். ராமசுப்பையர் 104
Vaisakha Full Moon—New India.

ஜகத்குரு ஸ்தோத்ரம்—பி. சங்கர சுப்பிரமணிய சாஸ்திரி 168
Star Invocation—(Samskrit)

ஜகத்குரு ஸ்தோத்ரம்—அ. நம்மாழ்வார் 240
Star Invocation (Tamil)—A. Nammalwar

மெய்ஞ்ஞானப்பால்—பரஞ்சோதியார் 259, 317
Outline of Theosophy—C. W. Leadbeater

யுத்தமும் சீர்திருத்தமும்—கே. யஸ். ராமசந்திர ஐயர் 331
War Reform—C. Jinarajadasa

வறுமை—ஜி. எ. சுந்தர ஐயர், பி. எ., பி. எல்., 195

ஈய்மை—மு. வேங்கடசாமி நாட்டார் 383

1000 ரூபாய் இனும் கொடுக்கப்படும்.

பார்சல்கள் வாங்கும்போழுது அடியிற்கண்ட விலாசம் சரியாக யிருக்கப்பட்ட லேபிளைப் பார்த்து வாங்குங்கள். உலகப்பிரசித்தி பெற்ற சாலாமிசிரி மூறப்பா கவர்மேண்டில் ரிஜிஸ்டராயிருக்கிறது.

ஐயா, கனவான்களே! அநேக ஜனங்கள் உபயோகிக்கததகாத மருந்துகள பலவறறைப பிரசுரம் செய்து அநேக ஜனங்களை மோசம் செய்கிறார்கள். எங்கள் மருந்தை அம்மாதிரியாக நம்புவீர்களென்று ஓர் சந்தேகம் தோன்றுகிறது. ஆகையால் ஒரு தரம் ரவழைத்துப் பரீட்சித்தால் பிறகு தங்களுக்குத் தாங்களே அறிவீர்கள். ஆரோக்கிய பாக்கியத்திற்கும் சந்தானம், ஆயுசு, பலம், தேஜசு முதலானவைகள் உண்டாவதற்கும மனிதருக்கு ரதததமே மூலமாயிருக்கிறது. ஆனதால். ஆரோச்கிய பாச்யமே பாக்யம் என்ற பழமொழிபோல் இரத்தத்தை ஒவ்வொரு மனிதனும் கெட்டுப்போகாமல் சுததமாய் காப்பாற்றிக்கொள்ள வேண்டியதவசியம் இல்லாவிட்டால் நானாவிதமான வியாதிகள் உண்டாகி மரணகால பரியந்தம் விசனத்திற்கு ஆளாக்குகிறது. சாலாமிசிரி என்பது ஓர்வித பழம். அது காபூல்கந்தர், ஆப்கனிஷ்டான் தேசங்களில் ஏராளமாக விளைகிறது. நாம் அந்த சாலாமிசிரியை தருவித்து அதில் மூறப்பா செய்திருக்கிறோம். சாலாமிசிரி மூறப்பா மூத்திரசம்பந்தமான அநேக வித வியாதிகளையும் இரத்த சம்பந்தமான அநேக வித வியாதிகளையும், இரத்தம் கெட்டுப்போயிருப்பதையும் கை, கால், தலைநோய், இடுப்பு நோய், முதலான வியாதிகளையும் இன்னும் அநேகவித வியாதிகளையும் சுவஸ்தப்படுத்தி தேகத்துக்கு ஆரோக்கியத்தையும் பலத்தையும் கொடுக்கும். அபபடி கொடுக்கிறதில் யாதொரு ஆக்ஷேபணையும் கிடையாது. தாம்பிர பஸ்பம், வெள்ளி பஸ்பம், தங்க பஸ்பம், இவைகளைக் காட்டிலும் நமது சாலாமிசிரி மூறப்பா மிகவும் மேன்மையானது. தவிர பர்ரேதவம் இம்மூறப்பாவுக்கு ஈடாகாது. இம் மூறப்பாவில எவ்விதமான அசுசி பதார்த்தங்கள் சேருகிறதில்லை. மிகவும் மேன்மையான பதார்த்தங்களும் அதிக விலையுயர்ந்த சரக்குகளும் சோதது தயார் செய்யப்பட்டிருக்கிறது. இம்மூறப்பா சாலாமிசிரியால செய்யப்படவில்லையென்று ரூபிக்கிறவாகளுக்கு 1000 ரூபாய் இனும் கொடுக்கப்படும். அப்படி கொடுக்காதிருக்கும் பட்சத்தில் கோர்ட்டு மூலமாய் வசூல் செய்துகொள்ளலாம்.

டப்பி ஒன்றை உபயோகித்தால் பூரணமாய் சுகத்தைக்கொடுக்கும் 2, 3-டப்பிகளை உபயோகித்தால் மரணகாலபரியந்தம் எவ்விதயான வியாதியும் அணுகாது.

கிரயம்:—டப்பி 1-க்கு ரூபாய் 2—0—0. போஸ்டேஜ் 1-டப்பி முதல் 3-டப்பி வரையில் அணா 0—6—0. காலணா கார்டில் எழுதினால் உடனே வி. பி மூலமாய் தங்கள் இருப்பிடத்தை பார்சல் தேடிக்கொண்டுவரும்படி அனுப்ப தயாராயிருக்கிறோம்.

சாமான்களுக்கு ஆர்டர் செய்பவர்கள் பிழையில்லாமல் தங்கள் விலாசங்களை விபரமாயும் தெளிவாயும் எழுதவும்.

டி மன்னுலால் டில்லி வைத்தியர்,

நெ. 5 அவினியூ ரோட்டு, பெங்களூர் சிட்டி.

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 8 | 1917-௵ மே௴ பிங்கள௵ வைகாசி௴ | பகுதி 1

பத்திராதிபர் பக்கம்.

இந்த சஞ்சிகை முதற்கொண்டு 8-வது தொகுதி ஆரம்பிக்கின்றது. சென்றஏழு வருஷகாலமாக பிரஹ்மஞ்ஞானம், சமயமுறை, நாகரீகம், சிற்பம், சாஸ்திரம் ஆகிய விஷயங்கள் சம்பந்தமான அறிவைத் தமிழுலகில் பரவச்செய்யுமாறு இப்பத்திரிகை முயன்றுவந்திருக்கிறது. பிரஹ்மக்ஞானத்தைப் புகட்டுவதற்காக நமது தலைவர்கள் இயற்றியுள்ள புத்தகங்களையும், வரைந்துள்ள வியாசங்களையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறோம். உதாஸீநஸாது ஸ்தோத்திரம், யோக சூத்திரங்கள் முதலிய உயர்ந்த சமஸ்கிருத நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து தமிழுலகுக்குப் பயன்படும்படி செய்துள்ளோம். பக்தசிகாமணியும், பாகவதோத்தமையும், சங்கீதஸாஹித்ய பிரவீணையுமான மீராபாய் என்னும் உத்தமியின சரிதத்தை நாடக ரூபமாக வெளியிட்டுவந்தோம். அதுவும் இன்னும் மூன்று ௴த்தில் முற்றுப் பெறும். இஃதன்றி தமிழ் வல்லுநரால் சத் விஷயங்களைப்பற்றி வியாசங்கள் எழுதும்படி செய்து பிரசுரித்திருக்கிறோம். இந்தியாவின் க்ஷேமத்

துக்குக் காரண பூதர்களும் இனி நம்மா திரு பூமியை முன்னேற்றம் பெறும்படி செய்யும் உத்தரவாதத்தை வஹித்தவர்களுமானவர்கள் சிறுவர் சிறுமிகளாகையால், அவர்களுக்கு மாதிருதேசபக்தியையும், மதவிசுவாசத்தையும், சத்யம், தயை, ஜீவகாருண்யம், முதலியநற் குணங்களையும், புகட்டும் வண்ணம் சிறுவர்களுக்கேற்ற விஷயங்களையும, வெளியிட்டிருக்கிறோம. இவ்விஷயங்களில் நாம் எவ்வளவு தேர்ச்சியடைந்திருக்கிறோம் அல்லது போதுமான மட்டில் நன்மையயந்திருக்கிறோமா என்று நிர்ணயிப்பது இப்பத்திரிகையைப்படிக்கும் நேயர்களின் பொறுப்பாகும்.

***

இப்பத்திரிகை நன்கு நடைபெறும்படி செய்யும் கடமை சந்தாதார்களுக்கும், விசேஷமாய் பிரஹ்மக்ஞானசபை அங்கத்தினர்களுக்கும், உண்டு என்று சொல்வோம். இப்பத்திரிகையைபபடிக்கும நேயர்கள் அடிக்கடி தங்களுக்குத் தோன்றும் யுக்திகளை எமக்கு எழுதினல் அவைகளில் கூடுமானவற்றை நாம் ஏற்றுக்கொள்ளலாகும். இயன்றவர்கள் வியாசங்களும் இதர விஷயதானங்களும் அனுப்பி உதவலாம். எவ்வளவுக்கெவ்வளவு விஷயதானங்கள் அதிகமாகக்கிடைக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு சிலாக்கியதரமான விஷயங்கள் பத்திரிகையில் வெளியில் வரும். இப்பத்திரிகையைப் படிப்போர், படிப்பது மட்டும் நம்முடைய பொறுப்பு என்று எண்ணுமல், பத்திரிகையின் சிலாக்கியத்தை அதிகமாக்குவதும், அதனுல் ஞானத்தை அதிகமாகப் பரவச்செய்வதும் தமது கடமையென்று கொள்வார்களானுல் இரண்டுவித உதவிகளைச் செய்யலாம். விஷயதானங்களை அனுப்பலாம். புதிதான சந்தாதார்களைச் சேரும்படி செய்யலாம்.

***

பிரஹ்மக்ஞான சபைத்தலைவர்களால் தற்போது பறைசாற்றப்படும் விஷயம் என்னவென்றால் கூடிய சீக்கிரத்தில் பரமன் ஒருவர் வருவார் என்பது. இதற்காகவே நக்ஷத்திர

சங்கங்களும், நக்ஷத்திர சேவகர் சங்கங்களும் ஆங்காங்கு ஏற்பட்டிருக்கின்றன. நமது பத்திரிகையில் ஏற்கனவே அவ்விஷயமாக வியாசங்கள் வெளிவந்திருக்கின்றன. ஆனால் இனிமேல் ஒவ்வொரு மாதத்திலும் அந்த சங்கங்கள் சம்பந்தமான சமாசாரக் குறிப்புகளையும், பரமன் வரவைப் பற்றி வெளியாகும் சகல விஷயங்களையும் நக்ஷத்திரப்பிரகாசம் என்னும் தலைப்பின் கீழ் வெளியிடுவோம். ஆகையால் மேற்கூறிய சங்கங்களின் காரியதரிசிகள், சமாசாரக்குறிப்புகளை சுருக்கமாக நமக்கு எழுதியனுப்பலாம். அது சம்பந்தமான விஷயதானங்களையும் அனுப்பலாம். அச்சங்கங்களுடைய அங்கத்தினர்கட்கு இப்பத்திரிகையை வாங்கிப் படிக்கும்படி அறிவிக்கலாம்.

தற்கால நிலைமை

சென்ற ஏப்பிரல்மீ 7உ சைத்திர பௌர்ணமி புண்ய தினம். பாரமார்த்திகமாகவும், லோக க்ஷேமகரமாகவும், உள்ள முயற்சிகளை துவக்குவதற்கு ஏற்றசுதினம். அடையாற்றில் அன்றைக்கு "ஸேவக ஸகோதரர்கள்" என்றபுதியதாக ஒரு சங்கமானது ஸ்தாபிக்கப் பெற்றது. இதில் சேரும் சகோதரன தன்னுடைய சகல சொத்துக்களையும் சங்கத்துக்கு அர்ப்பணம் செய்யவேண்டியது. ஆகாரத்துக்காக மட்டும் எவ்வளவு தேவையோ அதை சங்கத்திலிருந்து கிரஹிக்கவேண்டும். அவனுக்குக்கிடைக்கும் ஊதியமனைத்தும் சங்கத்தைசேரும். யாதாவதொரு உயர் லக்ஷியம் கொண்டு, ஒற்றுமையாய், தலைவருக்குக்கீழ்ப்படிந்து ஒழுகவேண்டும், என்பது இச்சங்கத்தின் விதி. இப்போது சேர்ந்த சோதரரைத் தவிர இனி அந்தச்சங்கத்தில் சகோதரராகச் சேரவேண்டுவோர் மூன்று வருஷகாலம் வரை முக்கரணங்களையும் அடக்கி, படிப்பு, கைங்கரியம், மிதஆகாரம் இவைகளால் தன்னுடைய யோக்கியதையை நிரூபித்த பிறகுதான சகோ

தராக அங்கீகரிக்கப் படுவர். ஆனால் கல்யாணம் செய்து கொண்டவர்களும், தங்களை ஆசிரயித்தவர்களைக் காப்பாற்ற வேண்டிய நிர்ப்பந்தத்துக்குட் பட்டவர்களும், தேக அசௌகரியம் முதலிய காரணங்களால் சகல சொத்துக்களையும் சங்கத்துக்கென்று பரித்தியாகம் செய்ய இயலாதவர்களும், இச்சங்கத்தில் வேறு ஒருவகுப்பாய் சேரலாம். அவர்கள் மேற்கூறியபடி உயர் லக்ஷியம் கொண்டவர்களாயிருப்பதோடு, இடப்பட்ட பணியைச் செய்யவும், தங்களுடைய வருமானத்தில் குறிப்பிட்ட பாகத்தை சங்கத்துக்கு தியாகம் செய்யவும், வாக்களிக்க வேண்டும். இவ்விதமான விதிகளுடன் ஸ்தாபிக்கப்பெற்ற சங்கத்தில் அன்று ஒவ்வொரு வகுப்பிலும் சிலர் சேர்ந்திருக்கிறார்கள்.

***

மேற்கூறிய நிர்ப்பந்தங்கள் மிகவும் கடுமையானவைகள். ஆனால் தீவிரமான சிரத்தையும், சங்கல்பமும் உள்ள உயர் லக்ஷியமுள்ள மனிதனால் கையாள முடியாதது ஒன்றுமில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் இரண்டு விதமான சுபாவமுண்டு. ஒன்றுமேல்நோக்கியது, மற்றது கீழ்நோக்கியது. சிற்சில சமயங்களில் சரீரங்களுடைய பந்தங்களுக்குட்பட்டு, தன்னுடைய நிஜமான பிரபாவத்தையும், மனோவன்மையையும் அறியாமல், கொண்ட விரதங்களை நிறைவேற்ற முடியாதென்று ஜீவன் மயங்குகிறான். ஆனால் உண்மையாய், "நான்" என்பது தேகமல்ல ஆனால் ஆத்மாவே. ஆத்மாவினுடைய சக்திக்கோ அளவுமட்டில்லை. ஈசுவரனுடைய அம்சமல்லவா ஆத்மா? ஆகையால இவ்வுண்மையையுணர்ந்த உத்தமர்கள இந்த சங்கத்தில் விதிக்கப்பட்ட நியமங்களை அனுஷ்டிக்கமுடியும் என்பதில் ஐயமில்லை. முதன் முதல் சேவக சகோதரராகச் சேர்ந்திருக்கிற ஸ்ரீமான அருண்டேல், அவருடைய சீடர்கள், முதலியவர்கள் சரியானபடி கொண்ட நோன்பை முடிக்கவல்லவர்கள். ஆகையால் இந்தச்சங்கத்தாரால உலக க்ஷேமத்தின்பொருட்டு விசேஷமான கைங்கரியங்கள் செய்யப்படும் என்பதும் அதனால் இந்தியாவானது மிகவும் பயன்பெறும் என்பதும் நிச்சயம்.

இக்காலமானது அசாதாரணமானதென்றும், எல்லோரும் பிரமிக்கத்தக்க நவீனமான மாறுதலகள் திடீரெனஏற்படுகின்றன வென்பதும், இக்காலத்து நடைபெறும்பலசூசகங்களால் தெரிய வருகிறது. ருஷிபாதேசததில் ஜனங்கள் தங்கள் அரசரான 'ஸாரை'த் தள்ளி தாங்களே ஆட்சியை கைக்கொண்டார்களாம். முன்னிருந்த அரசர் காலத்தில் பிரஹ்மக்ஞான சபை கூட்டங் கூடமுடியாமல் நிர்ப்பந்தமாயிருநததாம். ஆனல் புதிய குடியரசு வந்தவுடன் மேற்கண்ட நிற்பந்தங்கள் தானே விலகி பிரஹ்மக்ஞான சபை அங்கத்தினர்களும் நக்ஷத்திர சங்கத்தார்களும் கூட்டங் கூடி பேசுகிறார்களாம். கோரமான யுத்தமானது நடைபெற்றுவரும் இச்சமயத்தில இந்த ஆச்சரியகரமான மாறுதலானது ஏற்படும் என்று சிலகாலத்துக்கு முன்னர் யாராவது சொல்லி யிருந்தால், அதை ஒருவரும். நம்பியிருக்க மாட்டார்கள். ஆனல அது நடந்துவிட்டது. இது காலத்தின் விந்தை. இம்மாறுதலே மெச்சியும், அது உலகக்ஷேமத்துக்கும் ருஷியாவின் க்ஷேமத்துக்கும் காரணமானதென்று ஆங்கில மந்திரிகளும சிலாகித்துப் பேசியிருக்கிறார்கள்.

* * *

மதனப்பள்ளியில் பிரஹ்மக்ஞான சபை வித்தியா பீடத்தார் நடத்திவரும் கல்லூரியை பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர் ஏ. ராமராவ் அவர்கள் சென்ற ஏப்பிரல் மாதத்தில் பார்வையிட்டார்கள். அவ்விடத்தில் கண்ணுற்ற ஒவ்வொரு விஷயத்தையும் மெச்சிப் பேசியும் எழுத்துமூலமாக சிலாகித்து வரைந்து மிருக்கிறார்கள். "இநதக் கல்லூரியில் வித்தியா விஷயமாய்ச் செய்யப்பட்ட ஒவ்வொரு முயற்சியும் மெச்சத்தக்கது. மேனாட்டு சரீரஅப்பியாசமுறைகளை கற்பிப்பதோடு நிற்காமல் இந்திய முறைகளையும் இக்கல்லூரியில் செவ்வனே கற்பிக்கிறார்கள். அது சிலாகிக்கத்தகுந்தது. முக்கியமாய் தேகஅப்பியாச போதகராய் ஹரிகிருஷ்ணன்செட்டியார் வாய்த்திருப்பது காலேஜின் அதிர்ஷ்டம் தான். இக்காலேஜில் சுயநலம் பாராட்டாமல் அனபுடன் உழைத்துவரும் உபாத்திமார்களுடைய பெருமுயற்சியால் இக்கல்லூரி சீக்கிரம் உயர்ந்த ஸ்திதிக்கு வருமென்பதில் ஐயமில்லை,

காலையில் பாடங்கள் துவக்குமுன் பகவானைக் குறித்து தியானம் செய்தும் மதவிஷயமாய் போதிப்பதும் இதரப் பள்ளிகளில் இல்லாததும் இப்பள்ளியில் உள்ளதுமான விசேஷம். ஆகையால் செய்யும் காரியம் எல்லாம் பாரமார்த்திகப்பிரயோஜனத்தின் பொருட்டுச்செய்யவேண்டும் என்று மாணவர்கள் அறிகிறார்கள். இது மிகவும் சிலாக்கியமானது. ஸ்கௌட்களுடைய நடத்தையாலும் அவர்களுடைய சபாத்தினாலும் திருப்தியடைந்தேன். அவர்கள் இப்பயிற்சியால் மிகுந்தபயன் எய்துவார்கள். மாணாக்கர்களும் உபாத்திமாரும,பஜனைசெய்து வருவதைப்பார்க்க மிகவும் திருப்தியாயிருந்தது" இவ்விதமாக சர்க்கார் உத்தியோகஸ்தர் சிலாகித்துக் கூறியிருப்பது விசேஷம். கிருஷ்ண விலாச இராப்பள்ளிக்கூடம், வஸந்தாவிலாச இராப்பள்ளிக்கூடம் இரண்டையும் பார்வையிட்டு, மதனப்பள்ளிமாணாக்கர் அன்புடன் செய்யும் கைங்கரியத்தால் அவைகள் நடைபெறுவதையும், அவர்களுடையமுயற்சியால்திரவியம் தேடி நல்லகாற்றோட்டமுள்ள கட்டடம் கட்டியிருப்பதையும், பெரியவர்களுக்குக்கூட இச்சிறுர்கள் பரோபகாரம் செய்யும்படி நடத்தையால் உபதேசிப்பதையும் வியந்து இன்ஸ்பெக்டர் அவர்கள் தம்முடைய அபிப்பிராயத்தை புத்தகத்தில் வரைந்தார்கள்.

***

இத்தகைய கைங்கரியங்களால் பிரஹ்மக்ஞானசபை வித்யா பீடத்தின் கியாதி நாடெங்கும் பரவி வருகிறது. பிரஹ்மஞான சபையின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அங்கீகரிக்காத சாதாரண ஜனங்கள் கூட வித்யா விஷயமாய் அவர்கள் யெடுக்கும் முயற்சியை சிலாகிக்கிறார்கள். அன்பால் கற்பித்தல் என்னும முறையை ஜனங்கள் ஆமோதிக்கிறதாகவும் தெரியவருகிறது. பங்களூரில் ஸ்ரீமான் தொட்டண்ண செட்டி என்று ஒருவர் இருக்கிறார். அவர் தன சொத்து முழுமையையும் செலவழித்து 5½ ஏகரா விஸ்தீரணமுள்ள இடத்தில் நல்ல அழகான பார்வையுள்ள கட்டடங்கள் கட்டி தன் குல தெய்வத்தின் பேரால் ஸ்ரீலக்ஷ்மீநாரசிம்ம வித்யாலயம் என்ற பெயரிட்டு அதில்

யாதொரு சம்பளமும் வாங்காமல் கைத்தொழில் இலக்கியம் இவ்விரண்டையும் கற்பிக்க ஏற்பாடு செய்திருக்கிறார். சில ஏழைகளுக்கு ஊண், உடை உறைவிடமும் இனமாகக் கொடுக்கிறார். அவர்களுடன் செட்டியாரும் வசிக்கிறார். சில கடைகளைக்கட்டி வாடகைக்கு விட்டு வாடகையை இப்பள்ளியின் வருவாயாகச் செய்துள்ளார். சுமார் 300 மாணாக்கர்கள் இப்பள்ளியில் கற்கிறார்கள். தன்னுடைய சர்வஸ்வத்தையும் இவ்வாறு ஜன கைங்கரியத்தில் விரயம் செய்ததால் மைசூர் மகாராஜா அவர்கள் இவருக்கு ஜனோபகாரி என்று பட்டம்கொடுத்து சம்மானித்திருக்கிறார்கள். மேற்கூறிய வித்யாபீடத்தாரிடம் இப்பள்ளியை தன்காலத்திற்குப்பிறகு ஒப்புவிக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு அங்ஙனம் முதன் முதல் "உயில்" பத்திரம் எழுதி வைத்தார். ஆனால் தன் விருத்தாப்பியம் அடைந்திருப்பதால் பள்ளியின் மேற்பார்வைகுன்றுவண்ணம் இப்போதே வித்யாபீடத்தாரிடம் பள்ளியை ஒப்பிவித்துவிட்டார். $2\frac{1}{2}$ லக்ஷம் ரூபா பெருமானமுள்ள இந்தப்பள்ளி வித்யாபீடத்தாருக்குக் கிடைத்தது நல்லகாலம்தான். வித்யாபீடத்தார் ஆதீனத்தில் முதன் முதலாக வந்த கைத்தொழில் கற்பிக்கும் பள்ளி இதுதான். மேலும் வித்யா விஷயத்தில் ஊக்கமுள்ள மைசூர் மகாராஜா அவர்கள் ராஜ்பத்தில் மேற்கண்ட வித்யாபீடத்தாருக்கு கிடைத்த முதற் பள்ளியும் இதுதான். மைசூர் ஹைகோர்ட்டு ஜட்ஜு சந்திரசேகர ஐயர் முதலிய சிலரை அத்யக்ஷ சபையாராய் நியமித்து பள்ளியின காரியங்களை மேற்பார்க்கும்படி வித்யாபீடத்தார் செய்திருக்கிறார்கள். மதவிஷயமாயும் தேக அப்பியாச விஷயமாயும் மாணவர்களுக்கு வேண்டிய உதவி செய்கிறார்கள். இப்பள்ளியானது மேற்படி வித்தியாபீடத்தாரிடம் ஒப்புவிக்கப் பெற்றதை சிலாகித்து பங்களூர் 'கர்னாடக' என்ற ஆங்கிலப்பத்திரிகை கூறுவதைப்பார்க்க சந்தோஷிக்கிறோம். மலையாளத்தில் தீண்டாஜாதியர்களுக்கு தீயர்கள் என்றுபெயர். அவர்களை முன்னேற்றமடையும்படி செய்வதற்குபல முயற்சிகள் நிகழ்ந்துவருகின்றனவாயினும் உயர்ந்த

ஜாதியார் என்ற கர்வம் வகித்தவர்கள் அவர்களை நெருங்கு கிறதில்லை. மஞ்சேரி ராமய்யர் முதலிய பிராமணசிகாமணி கள் அவர்களை அணுகி அவர்கள் கோவில்களுக்குப் போய், அவர்களை முன்னுக்கு வரும்படி செய்ய முயன்று வருவது யாவரும் அறிந்த விஷயம். ஆனால் புறம்பேயிருந்துவரும் முயற்சிகளைக்காட்டிலும், உள்ளிருந்து கிளம்பும் கிளர்ச்சி மிக்க பயன்தரத்தக்கது. அந்த ஜாதியைச் சேர்ந்த ஒரு வர் சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜு ஸ்தானத்தை வகித் திருந்தது அந்த ஜாதியை எவ்வளவோ பிறருடைய கண் ணியத்தில் உயர்த்திவிட்டது. அம்மாதிரியே இப்போது ஒரு "தீய" ஸ்திரீ பி. ஏ. பரீக்ஷையில் தேறி, பி. ஏ. பட்ட மும் பெற்றிருக்கிறது, அந்த ஜாதியை உயர்த்தாமல் என் செய்யும்? உயர் ஜாதியார்களில்கூட பலர் தேறமுடியாத பரீக்ஷைகளைக்கூடத் தேறக்கூடிய ஸ்திரீ புருஷர்களை இக ழல் முடியாத காரியம். அவர்களோடு அவர் ஜாதியும் உயரும் என்பதில் ஐயமில்லை.

***

தற்போது புதுக்கோட்டை சமஸ்தானத்தில் இஞ்சி னீயராக இருக்கும் பிரஹ்மஸ்ரீ நீலகண்ட சாஸ்திரிகள் குமாரி ஸ்ரீமதி சிவகாமு அம்மாள் பம்பாயில் எம். பி, பி. எஸ் என்ற பெரிய வைத்தியப்பரீக்ஷைக்குப் போவதற்குப்பிரவே சக பரீக்ஷையில் தேறியிருப்பதால் அவருக்கு 200ரூ. பெரு மானமுள்ள "சத்தியவதீ லாலுபாய் சமால்தாஸ்" உதவிச் சம்பளம் கிடைத்திருக்கிறது. வைத்தியப்பரீக்ஷைக்குப் படி க்கும் ஹிந்து ஸ்திரீ மாணவர்களில் முதலாக தேறுகிறவரு க்கு கொடுக்கும் பரிசில் இது. ஹிந்து ஸ்திரீகள் வைத்தியத் தில் தேறினால் அல்லவோ, ஹிந்து ஸ்திரீகளுக்கும், குழந் தைகளுக்கும் வைத்தியம் செய்ய மிகவும் சௌகரியமாகும். பிரஹ்மஞான சபை அங்கத்தினர் குமாரியும் தானும் அச் சபை அங்கத்தினராயும் இருக்கும் இவ்வம்மணிக்கு நமது ஆசியைக்கூறுகிறோம்.

ஆர். ரெங்கஸ்வாமி ஐயர்.

பிரஹ்மக்ஞான தர்சனம் (பாலபாடம்)

அத்தியாயம் 18.

மனித சரீர அமைப்பு—(தொடர்ச்சி.)

நம்முடைய கீழான மூன்று சரீரங்களாகிய மானஸ சரீரம், இச்சா சரீரம், ஸ்தூல சரீரம், இவைகள் ஒரு ஜன்மம் முடியும் வரைதான் நிலைத்திருக்கின்றன. ஆகையால் ஒரு ஜன்மத்தில் நம்மால் கூடியவரை முயற்சி செய்வோமாகில் காரண சரீரத்தில் சேர்ப்பிக்கத் தகுந்ததான சில புதிய அநுபவங்களை சம்பாதிக்கலாம். இவ்விதம் நாம் சம்பாதிப்பதின் ஒரு பாகமானது அடுத்த ஜன்மத்தில் நமக்கு ஏற்படும் மானஸ சரீரத்தின் அமைப்புக்கு உபயோகமாகிறபடியால் நம்முடைய கடமைகளைச் சரிவரச் செய்து முடிப்போமாகில அடுத்த ஜன்மங்களில் ஒவ்வொரு தடவையும் வரவர மேலான மானஸ சரீரத்தை யடைவோம். மனிதன் நினைக்கும் இயல்பையுடையவனாகையாலும் மானஸ சரீரம் நினைப்பால் ஏற்படும் சரீரமாகையாலும் இவ்விஷயம் நமக்கு அதிக முக்கியமானதாக விருக்கிறது.

நாம் படிக்கும்போதும் நினைக்கும்போதும் மானஸ சரீரத்தை உபயோகிக்கிறோம். ஒரு நல்ல மானஸ சரீரத்தை யடைந்திருந்தாலொழிய ஒருவனும் நல்ல மாணவனாக இருக்கவாவது பரீக்ஷையில் மதிப்புடன் தேறவாவது முடியாது. சிரமப்பட்டு உழைத்தாலொழிய நல்லமானஸ சரீரத்தை அடையவும் முடியாது.

மேலும் மானஸ சரீரமானது நம்முடைய எண்ணங்களாலும் இச்சைகளாலும் நிமிஷந் தோறும் மாறிக்கொண்டேயிருக்கிறது. அவ்வெண்ணங்களும் இச்சைகளும் அற்பமானவைகளாயும் ஸ்திர மற்றவைகளாகவும் இருந்தால் மானஸ சரீரமும் அப்படியே பலமற்றிருக்கும். ஆகையால் நீ ஒரு விஷயத்தை ஆலோசித்து அதில் மனதை நிறுத்தி

பிறருடைய அபிப்பிராயப்படி போகாமல் உன் சொந்த அபிப்பிராயத்துக்கு மனதைக் கொண்டுவரும்படி மனதைப் பழக்கினால் உன் மானஸ சரீரம் திடப்பட்டு எந்த விஷயமும் உனக்கு இலகுவாய் வெகு சீக்கிரத்தில் புலப்படும்.

இவ்விதம் நீ சில காலம் பயிற்சி செய்து வருவாயாகில் உன் மனோ சக்தியின் திடத்தை வெளிப் படுத்துவதான சில சம்பவங்கள் பெரும்பாலும் நேரிடுவதுண்டு. ஒருவேளை ஆறு மாதத்திற்குமுன் உன்னால் சிந்தித்து அறிவதற்கு மிகவும் கடினமாகத தோன்றி கைவிடப்பட்டதான ஒரு விஷயம் இப்போது உன் ஞாபகத்திற்கு வரும். நீ அதிசயிக்கும்படி அது மிகவும சுலபமானதாக விருக்கும். அதனால் நீ மிகவும் தைரியமடைந்து அதைச் சிந்தித்துப் பார்ப்பாய். என்னஆச்சரியம்! இப்போது முதல் தடவையிலேயே நீ அதைத் தெரிநது கொள்ளுகிறாய். இதனால் மத்தியகாலத்துக்குள் உன் மானஸ சரீரத்தை நன்றாய் பலப்படுத்தியிருககிறாயென்று ஏற்படுகிறது. அதை மேன்மேலும் செய்ய தைரியமடைகிறாய்.

இவ்வித அனுபவங்களை நாம் எப்போதும் அடைந்து கொண்டிருக்கிறோம. பூலோகபரீக்ஷகர்கள் செய்யமுடியாததான அனேக பரீக்ஷைகள் இருக்கின்றன.

நூதனமாய் செங்கற்களினாலும் கருங்கற்களினாலும் கட்டப்படும் ஒரு வீட்டை ஆரம்பம் முதல் கவனிததுப் பார். தினந்தோறும கொஞ்சங்கொஞ்சமாய் கட்டடம் உயர்ந்து வருகிறதல்லவா? ஒரு கல்லின்மேல் ஒரு கல் வைககப்பட்டு கட்டடம் முடிவாகுமவரை வளாந்துகொணடே போகிறது.

உன்னுடைய எண்ணங்களும் உயிருள்ள கருங்கல் செங்கல்களை யொத்திருக்கின்றன. உன் சரீரம் கட்டடமாகும. நீ உள்ளே யிருந்துகொண்டு உன்னைச் சுற்றிலும் சரீரமாகிய கட்டடத்தைக் கட்டும் கொத்தனைப் போலிருக்கிறாய். அவ்விதம உன மானஸ சரீரம கட்டி முடிவான பொழுது அதில் நீ அங்குமிங்கும் சிறிதை மாற்றலாம். ஆனாலும் அந்த ஜன்மம் முடியும் வரை அதில் தான் நீ

வசிக்கவேண்டும். அது உனக்குத் திருப்தியற்றதாய் இருக்கலாம். அப்படியிருந்தாலும் நீ அதை கூடியவரை நன்றாய் உபயோகித்து அதினாலுண்டாகும் பயனை யடையவேண்டுமே யொழிய வேறொரு வீட்டை அடைய முடியாது.

உன்னுடைய அடுத்த ஜன்மத்தில் நீயடைந்த விருத்தியம்சங்களுடனும் சரீரமாகிற கட்டடத்துக்கு உபயோகமுள்ள நூதனமான நல்ல சாமான்களுடனும் ஆரம்பிப்பாய். நல்ல சாமான்களென்பவை முன் ஜன்மத்தில் நீ செய்த முயற்சிகளும், அவைகளில் நேர்ந்த தவறுகளும் சுவர்க்கலோக வாசத்தில் சக்திகளாக ஏற்பட்டு அவைகள் உன் காரண சரீரத்தில் ஒரு பாகமாக அமைந்து எக்காலத்திலும் உன் உபயோகத்துக்குத் தயாராயிருப்பவைகளே.

இவ்விதமாய் பூலோகத்தில் எடுக்கும் ஒவ்வொரு நூதன ஜன்மத்திலும் புதிதானதும் விர்த்தி செய்யப்பட்டதுமான சரீரத்துடன் உன் வாழ்நாளைப் போக்குவாய் அச்சரீரத்தில் நீ அமர்ந்த உடனே, அதை வைத்து வேலை செய்து இன்னும் அதிகமாய் அதை விர்த்தி செய்ய ஆரம்பிப்பாய். நீ சோம்பேரியாகவும் அதிக கவனமும் கவலையும் எடுத்துக் கொள்ளாம லிருந்தாலோ முந்தின விருத்தியம்சங்கள் கெட்டுப்போம். அப்படிக் கெட்டுப் போனால் அடுத்த ஜென்மத்தில் நீ ஒரு பாழான சரீரத்துடன் ஆரம்பிக்கவேண்டி வரும். ஏனென்றால் உன் சரீரமாகிற கட்டடமானது தள்ளுபடி செய்யப்பட்ட பழய சாமான்களால் கட்டப்பட்டதாயிருக்கும்.

பிறருடைய உதவியின்றி நீயாக முயற்சி யெடுத்துக்கொண்டு ஒரு விஷயத்தை யறிய உனக்கு எவ்வித எண்ணங்கள் உண்டாகின்றனவோ அவைகளே உன் சொந்த எண்ணங்களாம். அவைகள் தான் உன் சரீரமாகிய கட்டடத்துக்குத் தகுந்த சாமான்கள். அவைகள் உன் மானஸ சரீரத்தை வெகு சீக்கிரம் வளரச் செய்கின்றன. வேறெந்த உபாயத்தாலும் அது வளராது. இவ்விதம் உன் சொந்தமான எண்ணங்களுடன் விஷயங்களை ஆராய்ச்சி செய்து வருவாயாகில் பெரிய எண்ணங்களெல்லாம் உனக்கு சீக்கிரத்தில் கைகூடும்.

வி. வெங்குசாமி ஐயர்.

சாந்தம்.

(ஏழாந் தொகுதி 271-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

ஆண்மையும் அமைதியும் ஆத்மசக்தியைப் பூர்த்தி செய்து நிற்கும். சீர்த்திப அமைதியோடு கூடிய விவேகத்தினு லெய்தும் ஆனந்தமே ஆத்மானந்தமாம். பிறப்பின் பயனை பெற்றவர்க்குரிய அடையாளங்களாவன, ஆண்மை, அமைதி அறிவு என்பனவாம். சஞ்சலமின்றிய மனத்தில் என்றுங் குன்ரு இன்பமே தோன்றும். பயம் துக்கம் என்னும் இவ் விரண்டும்மனதுக்குச் சஞ்சலத்தை யுண்டுபண்ணும். அவற்றுள் துக்கம் இறந்தகாலத்தைப் பற்றியது. அஃதாவது கழிந்துபோன பொருள்களைப் பற்றி நினைந்து நினைந்து இரங்கி வாடுதல். பயம் வருவதைப்பற்றியது. அஃதாவது மூப்பு, நோய், வறுமை, ஆபத்து, மரணம், முதலியன வருமே யென்றுநினைதொறும் நடுங்கியயர்தல். இத்தகைய துக்கத்தையும் பயத்தையும் விவேகத்தால் விலக்கி மனத்தை நிர்மலமாக வைத்திருத்தல்வேண்டும். "எதுவர வேண்டுமோ வது வருக என்னை விடுத்தேது அகலவேண்டுமோ அது அகலுக" என்று திடபுத்தியோடு திருவருட் செயலையே நாடி இருத்தல் நலம். ஆன்ம அறிவுக்குப்பயன் உயிர்கட் கிதம புரிந்தொழுகுதலேயாம். உயிர்கண்மாட் டிதம் புரிந்தொழுகுமுத்தமகுணம் சாந்தமுற்றவற்கேயமையும். பயம் துக்கம் என்னும் இரண்டினாலும் சஞ்சலத்தை யடைந்துள்ள மனத்தில் சாந்தம் ஒரு போதும் தலையெடுக்காது. பிறர் கூறும் புகழ்மொழிகளும், இகழ் மொழிகளும் இருவினைப் பயனாகவே வருகின்றனவென்றுணர்ந்து உவகையும் வாட்டமுமுறாதிருக்கவேண்டும். நல்லன வரும் பொழுது மகிழ்வோடு ஏற்று அனுபவித்தும் அல்லன தோன்றும் போது அங்ஙனஞ்செய்யாது மடங்கிநிற்றல் ஆன்ம அறிவுக் கழகன்று. நலவினை தீவினை யென்னும் இருவினைப்பயன் களாகிய இன்பமும் துன்பமும் செய்தானையே தப்பாது

பற்றி நிற்றல், சத்தியவடிவினராகிய பரம்பொருளது சத்திய சங்கல்பமேயாம். அச்சங்கல்பம் அரூபமாயிருக்கிறபடியால், இந்நிலவுலகத்தில் பரந்து விரிந்து கிடக்கின்ற ஜீவர்களை முன்னிலையாகக் கொண்டுள்ளது. அமைதியும் அறிவும் பூர்த்தியாகாத வுளத்தில் இவ்வுண்மை தோன்றுதலரிது. ஒருவன் இழிவுரையாடி நம்மை வருத்துவனேல் அவ்வுரைக்குரிய இழிகுணங்கள் நம்பாலுள்ளதாவென்றுலோசிக்கவேண்டும். உளதேல் அவனுரைதவறு அன்று. நாம் இவற்றையறவே யொழிக்க வேண்டுமென்றெண்ணியும், இலதேல் அவனுரைபொய், பொய்யோவொருபோதும் தலையெடுக்காது, தவிரவும் அம்மொழியாளன் இழிந்த மனத்திலிருந்து தோன்றியதென்றுணர்ந்து அவன் மடமைக்கிரங்கியும் அமைதியுறல் வேண்டும். இவ்வமைதியவனதிழிகுணங்களைக் கழிவடையச் செய்யும். இக்கருத்தடங்கிய கவியொன்று தற்காலத்து மேதாவியரொருவராற் செய்யப்பெற்றுள்ளது. அதனை யீண்டுத்தருதும்.

உனையொருவரிகழ்ந்தனரேலதுக்காவிகழ்
　　க்தனரென்றுன்னியாங்கே
தினையளவுதப்புளதே லதைநீக்காய்தப்
　　பின்றேற் சினமுறாதே,
சுனைகழையைவேம் பென்னிற்கழைக்கு
　　மோர்குறையுண்டோ கல்லின்மோதித்
தனையுடைப்போர்க் குணவுதரும் தேங்
　　காய்போல் எவர்க்கு நன்மைதனைச் செய்நெஞ்சே.

நமது மொழிகளுஞ் செயல்களும் அமைதியோடு கூடியிருத்தல் வேண்டும். அமைதியாளருடைய தன்மையானது ஆழ்ந்து அகன்று விரிந்து பரந்து செல்லும் ஆற்று நீரோட்டத்தை யொத்துள்ளது. சாந்தமானது தன்னையணுகிய உலோகங்களை யீர்ப்பதுபோலச் சாந்தமும் உலகைத் தன் வசப்படுத்தி நிற்கின்றது. அறிவும் ஆண்மையும உடையவரிடத்தே காணப்படும் அமைதிக்கே சாந்தமென்பது தகும். சோம்பல்கொண்டு மதி நலமின்றி யெவ

ற்றையுங் கவனியாது இருக்கும் சிலபார்க்கள் மாட்டுக்காண ப்படும அமைதியை சாந்தமெனக் கூறல் தகுதியன்று. "அச்சமே கீழ்களதாசாரம்" என்றபடி அச்சமும் ஆசையும் பற்றிச் சிலர் மாட்டு ஒழுக்கம் காணப்படுமாயினும், அஃது ஒழுக்கமென அறிஞரால் எண்ணப்படாது. அது போல கள்ளம், கபடம், மடம், மயக்கம் முதலிய காரணங்களாய் சிலரிடத்துக் காணப்படும் போலியான அமைதிதனக்கும் பிறர்க்கும் பெரும்பயனுதவாமல் நிற்கும்.

(தொடரும்.)

ஜெகவீரபாண்டியன்.

பம்பாய் ஸ்ரீ ஜீவதயாஞான ப்ரஸாரக நிதியின் 6-ஆவது வருஷத்திய (ஆங்கிலத்தில்) அறிக்கை.–இந்நிதியின் நோக்கங்களாவன. (1) "சைவமான" ஆகாரத்தின் அதாவது மாமிசவர்ஜனமான சாகாதி ஆகாரத்தின் சிலாக்கியத்தைப் பற்றி உலகத்தார்க்கு அடிக்கடி கற்பித்தல். (2) விதவைகளின் கஷ்டங்கள். குழந்தைகளைக் கைக்காக கொலை செய்தல் முதலிய ராஜரீகவர்ணமான பொது விஷயங்களைப பற்றி கவனித்தல்.

(3) பிராணிகளுக்கு தீங்கு செய்யும் வழக்கங்களையும், ஆராதனைகளையும் விலக்கும்படி அதிகாரிகளையும் ஜனங்களையும் வேண்டல் (4) பிராணிகளுக்கு மனிதர் தீங்கு செய்யாமல் பாது காத்தல் (5) ஒரு ஜாதி யாருக்காவது கோபம் நேரிடா வண்ணம் மேற் கூறிய நோக்கங்களை நிறைவேற்றல். நம்முடைய இளைய சகோதரராம் மிருக பக்ஷிகளுடைய நன்மையை நாடி செவ்வனே உழைத்துவரும் இந்த நிதியின நன்முயற்சியால் அநேகர் மாமிசம் புசிப்பதை விலக்கி விட்டார்களாம். மகம்மதியர்களும் இதை ஆதரிப்பது மிகவும் மெச்சத்தகுந்தது. இந்திய அரசர்கள இந்நன்முயற்சியை புகழ்ந்து உதவி செய்திருக்கிறார்களாம். இந்தியாவிலுள்ள முக்கிய பத்திரிகைகள் இந்த நிதியை சிலாகித்திருக்கின்றன. இதைப் போன்ற 50 இடங்களில் வேறு நிதிகள ஸ்தாபித்திருப்பதே இந்த நிதியின் சிலாக்கியத்துக்கு போதிய சான்றாகும். பற்பல நகரங்களில் பெரிய கூட்டங் கூடி பேசுதலானும், உபதேசகர்களை பல பாகங்களில அனுப்பி கற்பித்தலானும், "ஊனைத்தவிர்தன்மை" "ஜீவகாருண்யம்" இவைகளைப் பற்றி வியாசம் எழுதும்படி செய்து அவைகளில முதன்மையானதற்கு பரிசு அளிப்பதினாலும், ஜீவகாருண்யத்தை நாடெங்கும் பரவும்படி செய்கிறார்கள். இந்த ராஜதானியிலும் இதைப்போன்ற நிதியை ஸ்தாபிப்பார்களாக.

நக்ஷத்திரப்பிரகாசம்.

ஸகோதர ஸகோதரிகளே!

நாமெல்லோரும் நக்ஷத்திரங்கள். நல்லெண்ணங்களையும், நல்ல வார்த்தைகளையும், நல்ல ஆசைகளையும், நல்ல காரியங்களையுமட்டும் கைக்கொண்டால்தான் நக்ஷத்திரங்களாகிய நாம பிரகாசிக்க முடியும். ஒருவரோடொருவர் சேராமல் தனித்திருப்பதைக்காட்டிலும் நாமெல்லோரும் ஒருங்கே சேர்ந்தால் அதிகமாய்ப் பிரகாசிக்கலாம் என்ற கருதி, நாம் ஒருங்கே சேர்ந்திருககிறோம். நம் சங்கத்திற்குப் பெயர் நக்ஷத்திர ஸங்கமல்லவா? ஆகாயத்தில் நக்ஷததிரம் பிரகாசமாயலலவா இருக்கிறது? சில சமயங்களில் மேகங்களால் அவை மூடப்படடாலும், எப்படியாவது கடைசியில் பிரகாசிக்கின்றனவல்லவா? அம்மாதிரியே தான் நாம் பிரகாசிக்கவேண்டும். கவலையும், கோபமும், துக்கமும், சோம்பலும் மேகங்கள் போல் நக்ஷத்திரங்களாகிய நம்மை மறைக்கின்றன. முக்யமாய் நாம் நான்கு வழிகளிற் பிரகாசிக்கலாம்:—

முதலாவது, நம் முகம். நம் முகத்தைச் சுத்தமாயும், அழகாயும், பலர்ந்த தாமரைகளைப்போல வைத்துக்கொள்ளவேண்டும். சந்திரனைப்போல் நம முகத்தை வைததுக் கொள்ளவேண்டும. அதாவது, பிறர் நம்மைப் பார்த்தால், நம்முடன் சிநேகமாயிருக்கவேண்டுமென்றும், நம் அருகே வந்து நம்முடன் சற்று பேசவேண்டுமென்றும், அவர்கள் எண்ணுமாறு நம் முகததை லக்ஷணமாய் வைத்துக்கொள்வோமாக. ஏனெனில், எங்கெந்த இடத்தில அசுத்தத்தைத் துடைதது, சுத்தத்தையும அழகையும் அமைக்கிறோமோ, அங்கெல்லாம் நக்ஷததிரங்களாகிய நாம் பிரகாசிக்கமுடியும். பளிங்கு விளக்கு சிம்நிகளைத் துடைக்காமல்

வைத்தோமானல், தீபத்தின் பிரகாசம் நன்ருய் வெளிவீச முடியவில்லையல்லவா? ஸூர்யப் பிரகாசம் உள்ளே வருவதற்கு ஜன்னல் சுத்தமாயிருக்கவேண்டியதுபோல, பகவானுடைய பிரகாசம் உலகத்தார்க்குப் பரவும்படியாக, எல்லோரிடத்திலும் நாம் முகமலர்ச்சியோடிருக்கவேண்டும்.

இரண்டாவது, நம் வாக்கு. நம்முடைய வார்த்தைகள் மதுரமாயிருக்கவேண்டும். உண்மையாயிருக்கவேண்டும். உண்மையைச் சொல்வதிலும், பிறர் மனம் நோகாமல் நாம் சொல்லவேண்டும். நாம் சொல்லவேண்டியதைத் தெளிவாயும் தைர்யமாயும் சொல்லவேண்டும். பகவான் வரப்போவது உண்மை என்று நம் உள்ளுணர்வால் தெரிந்துகொண்டிருக்கிறோம். இதைப் பிறருக்குச் சொல்லும்போது, பிறர் நம் கருத்தையும், பக்தியையும் அறியாமல், அசட்டை பண்ணிலும், நாம தெளிவாயும் வற்புறுத்தியும் பேசப் பழகிக்கொள்ளவேண்டும். அழகல்லாத வார்த்தைகளை நாம் பேசவேண்டாம்.

மூன்ருவது, நம் எண்ணங்கள். அழகான நல் எண்ணங்களையே மனத்தில் கொள்வோம். அடுத்த க்ஷணத்தில் பகவான் வருவாரோ என்று எப்போதும் எதிர்பார்த்தே எங்கெங்க பரோபகாரமான கார்யங்களை எப்படி எப்படி ஒருங்கே சேர்ந்து முடிக்கலாம் என்றே நாம் யோசித்தல் வேண்டும். பரோபகாரத்தையும், தேச பக்தியையும், ராஜ பக்தியையும், ஈசுவர பக்தியையும் பற்றிய எண்ணங்கள் தான் நம மனதிற்கு நிலைவரமான சந்தோஷத்தைக் கொடுக்கின்றன. 'தமக்கு தமக்கு' என்ற தன்னலம் பற்றிய குறுகிய எண்ணம் எதுவும் அற்ப சுகத்தையும் நீடித்த துக்கத்தையும் தான் கொடுக்கும். எவ்விஷயத்தையும் நாம் தெளியத்தீர விசாரிக்கவேண்டும். அவதார விஷயமாய் நாம் அடிக்கடி சிந்திக்கவேண்டும். அப்போதுதான் நக்ஷத்திர வெளிச்சம் நம்முள் மறைவாயிருந்து நம்மைச்சரியாய் வழிநடத்துகிறதை உணர்வோம். நம் எண்ணங்களை, ஒவ்வொரு நிமிஷமும் பகவானையே நினைக்கும்படி பழக்குவோமானல்,

அது இலகுவாகும். பிறரும் நாம் சொல்லாமலே நல்ல நினைவுகளைக் கொள்வார்கள். நமது எண்ணங்கள் குழம்பிக்கொண்டிருந்தால், பிறர் மனத்தையும் அவை தாக்கி அவர்கள் மனங்களையும் குழம்பச்செய்கின்றன.

நான்காவது, நம் செய்கைகள். நாம் எத்தகைய நல்லெண்ணத்தோடும், பக்தியோடும் இருந்தாலும், நல்ல கைங்கர்யங்களில் நாம் உழைத்துப் பழகாமற்போனால், சமயங்களில் தவறுவோம். அப்போது அதனால் இடையூறு விளையும். பரோபகாரங் கருதி உழைக்க முயன்றால்தான் இன்னின்ன வழிகளில் நம் அறிவை விருத்தி செய்துகொள்ள வேண்டும் என்று அறிவோம். தன்னலங்கருதாமலும், தளர்வு சோர்வின்றியும் நாம் முயன்று வரவேண்டியதே ஸ்வாமியின் கருத்து. அவ்விதமே அவர் பகவத் கீதையில் கூறியிருக்கிறார். "மூன்று உலகங்களிலும் நான் செய்யத்தக்கதொன்றுமில்லாவிடினும், நானடையவேண்டியதொன்றுமில்லாவிடினும், நான் கருமங்களைச் செய்துகொண்டேயிருக்கிறேன்." என்று கீதையிற் கூறியிருக்கிறாரல்லவா? பகவானைப் பின்பற்றக் கருதும் நாமும் தளராமல் முயற்சிக்கவேண்டியதவசியம். "உலகத்தோர் எல்லோருக்கும் பெரியவராயிருந்து உலகத்தை மேன்மார்க்கத்தில் வழிநடத்துகிற லோககுருவாகிய வியாஸர் உலகத்திற்கு வரப்போகிறார். விழிப்பாயிருந்து அவரை உபசரிக்கக் காத்திருங்கள், தூங்காதீர்கள்" என்று ஒவ்வொரு நாளும், நீங்கள் யார் யாரைப் பார்க்கிறீர்களோ, அவர்களெல்லோரிடமும் சொல்லுங்கள். வெட்கப்படாதீர்கள். சிறுவர் சிறுமியராகிய நாமே இவ்வேலையைச் செய்யவேண்டும். நரசிம்மாவதார காலத்தில், ஐந்து வயது பாலனான பிரஹ்லாதன், அநேக சிறுவர்களைச் சேர்த்துக்கொண்டு "பகவான் வருவார், தூணிலும் இருக்கிறார், துரும்பிலும் இருக்கிறார். அவர் அன்பு நிறைந்தவர், எச்சமயத்திலும் வெளித்தோன்றுவார், மோசம் போகாதீர்

கள்" என்று எச்சரித்ததை நாம் வாசித்திருக்கிறோமே. அவர் மாதிரியே நாமும் நடக்கத்தடை என்ன?

இவ்விதம் நாம் ஒவ்வொருவரும் பழகுவோமானால், நக்ஷத்திரங்களாகிய நாம் அதிக ஒளியோடு விளங்கலாம்.

***

சென்ற ஏப்பிரல்மீ 6வ இவ்வூருக்கு 12மைலுக்கு அருகே உள்ள அழகர்கோவில் என்னும் ஓர் விஷ்ணு ஸ்தலத்தில் நடந்த திருக்கல்யாண மஹோத்வஸத்திற்கு நக்ஷத்திர மெம்பர்களாகிய யாம் மூவர் போய் அங்கு கூடியிருந்த பக்தர்களுக்கு பக்தியைப்பற்றி உபந்யஸித்தோம். பின் ஒரு சமயம் நாங்கள் அங்கு கண்ட சில காட்சிகளைப் பற்றியும் அவ்வுபந்யாஸச் சுருக்கத்தையும் தங்கட்கெழுதுவேன்.

***

ஸ்ரீ வைதண்டம் நக்ஷத்திரக் கிளைச் சங்கத்தின் இரண்டாம் வருஷோத்ஸவம்:—சென்ற ஏப்ரல்மீ 29-ஆம் வ மதுரை பிரஹ்மக்ஞான சங்கக் காரியதரிசி பிரஹ்மஸ்ரீ வி. ராமசந்திர ஐயரவர்கள் அக்ராஸனத்தின் கீழ் நடைபெற்றது. முதலில் மங்களாசரணம் செய்து, ஜி. ஆர். ஸ்ரீநிவாஸன், வி. சோமசுந்தரம் என்னும் இரண்டு சகோதரர்கள் ஸ்ரீ பெஸண்ட் அம்மையார் "ஜனஸமூஹ கைங்கர்யத்தைப்" பற்றி எழுதியுள்ள புத்தகத்தினின்று சில உயர் வசனங்களை எடுத்துரைத்தார்கள். அடுத்து கார்யதரிசியின் அறிக்கைப் பத்திரம் படிக்கப் பெற்றது. பிறகு லாட்ஜ் இன்ஸ்பெக்டர் பிரஹ்மஸ்ரீ பி. ஆர் சுந்தரராஜ ஐயரவர்கள் ஜகத் குருவின் வருகையைப் பற்றி அழகாய்ப் பேசினர். நக்ஷத்திர சங்கத்திற்காக வாசகசாலை யொன்றும் அக்ராஸனரால் திறக்கப் பட்டது. பிறகு வி. எஸ். ஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் இ. எஸ். கள்ளபிரான் பிள்ளையவர்களால், நல்வாழ்வு என்னும் ஓர் உபந்யாஸமும் நிகழ்ந்தது. பிறகு அக்ராஸனர் முடிவுரை கூறி, உற்சவம் நிறைவேறியது. இரவு 8-30 மணிக்கு மதுரைக் கிளைச் சங்கத்து ஸ்ரீபி. ஏ. சுப்பிரமணிய ஐயரவர்களால் நிழற்படக் காட்சியும் நடந்தது. சிறியோர், பெரியோர் அனைவருமாக, சுமார் 200 பெயர்கள் கூடியிருந்தார்கள். பெரியோர் கிருபையால் எல்லாம் இனிது நிறைவேறினவென்று கேட்கச் சந்தோஷிக்கிறோம்.

தங்கள் ஸஹோதரன்,
B. S. ராமசுப்பையர்.

பெண்கல்வி.

(7-ஆம் தொகுதி 457-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

பின், பெண்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கு முறையைக்குறித்தாராய்வோமாயின், ஆதியிலிருந்தே மதசம்பந்தமானவும் நீதிவிஷயங்களடங்கியவுமான புத்தகங்களைக் கற்கச் செய்துவந்தால் மிகவும் உத்தமமெனத்தோன்றும். முக்கியமாக ஒவ்வொரு ஸ்திரீயும் தன் தன் மதசம்பந்தமான கதைகளையும் அவைகளின் நீதிகளையும் தெரிந்திருத்தல் வேண்டும். இங்ஙனமாக ஹிந்துப்பெண்கள் தங்கள் மதசம்பந்தமாகிய நூல்களையும் கதைகளையும் ஏனைய மத ஸ்திரீகளும் அவ்வாறே தங்கள் தங்கள் மத நூல்களையும் கதைகளையும் கற்பாராக. அதன்பின் உலக ஞானம் உண்டாதற் பொருட்டுப் பூகோள சாஸ்திரமும் தேசசரித்திர முதலியவைகளும் கற்பிக்கவேண்டும். அவர்கள் இவ்வாறு மதசம்பந்தமான சரித்திரங்களைக் கற்பதனால் ஈசுவர பக்தியும், முன்னிருந்த பெரியோர்கள் ரிஷிகள் முதலான தெய்வத்தன்மையுற்ற மேலோர்களின் ஸ்மரணையும் தெய்வ பக்தராயிருந்து மோக்ஷமடைந்தவடியார்களின் சரிதங்களும் தம்மனதிற் பசுமரத்தாணிபோற் பதிந்து தாமும் அவர்கள் அநுஷ்டித்த முறைகளையும் விதிகளையும் அநுஷ்டித்து அவ்வாறொழுகத் தலைப்படுகின்றனர். தேசசரித்திரங்களைக் கற்பதனால் தம் தேசத்தை முன்பரசாண்ட வேந்தர்களது சரித்திரங்களையும் அவர்களின் வீரச்செய்கைகளையும் அக்காலத்துத் தேசமிருந்த நிலைமையையும் நன்குணர்ந்து அவைகளைத்தற்கால நிலைமைக்கொப்பிட்டுப்பார்த்துத் தேச நன்மைக்காகத் தாம் செய்யவேண்டிய சீர்திருத்தங்களைச் செய்ய முயலவும் ஏதுவாகின்றது.

சங்கீதம், சித்திரமெழுதல், வர்ணமிடுதல் முதலானவைகளும் ஸ்திரீகள் தெரிந்திருத்தல் அவர்கள் களைப்புச் சலிப்புற்றபோதும் அக்காலத்தை விநோதமாகவும் உற்சாக

மாகவும் கழிப்பதற்கேற்றதாயிருக்கும். எனினும் இவைகள் அவ்வளவு வியக்கத்தக்க கல்விகளல்ல. ஆயின் இக்காலத்திலோ பெரும்பாலும் சிறு குழந்தைகளெல்லாம் இலக்கிய இலக்கணப்பயிற்சியை முழுதும் மறந்து சங்கீதப் பயிற்சியை அதினினும் உயர்ந்ததாகக்கருதியோ அல்லது வேறெதனாலோ பெற்றோர்களின் தூண்டுதலால் இசைக் கல்வியை மாத்திரம் இடைவிடாது பயின்று வருதல் தலையெடுத்து வளர்கின்றது. அதுவும் ஓர்விதக்கல்விதான் என்பதற்கையமில்லை. அஃது செவிக்கினியதோருணவுமாமென்பதை மறுக்கவும் வல்லேனல்லன். சில சமயங்களில் சங்கீதகானம் கேட்போர் மனதை ஏகாக்ரப்படுத்திப் பக்தி மார்க்கத்துக்குச் செலுத்தவும் வல்லதாயுள்ளது. எனினும் நூற்பயிற்சியாகிய கல்விதரும் பயனும் அதனையடைந்தோர் பெறும் பேறும் இச்சங்கீதப்பயிற்சி மிகப்பெற்ற பெண்டிர்க்காயினும் ஆடவர்க்காயினும் உறுவது மிகவுமரிதென்பதும் இவ்விசை நூற்பயிற்சியானது ஒவ்வொருவருக்கும் இளமையிற்றான் இன்பம் பயக்கும் தன்மையுடையதாமேயன்றி இடையறுவின்பத்தை யென்றும் தருவதாகிய கல்வியைப்போல் முதுமையிலும் அத்தகையதாகாதென்பதும் மாத்திரம் உறுதியாகக் கூறுவேன்.

பின், முற்கூறியவாறு கற்றவொருத்தி, 'இவட்கியாது தெரியும் இவள் கற்றலன்றி மற்றொன்று மறியாள்' எனக் கண்டோர் கூறுதற்கிடமாகத்தான் கல்வியில் மாத்திரம் வல்லளாய் அடுதொழிலறிவு சிறிதுமிலளாயும் ஏனைய இற்றொழில்கள் யாவுமிபற்றும் வகையறியாளாயும் இராமல் இவைகளிலெல்லாம் பிறரினும் பதின் மடங்கு சிறந்தவளாயிருத்தல் வேண்டும். இதுவும் யாவரிடத்தும் சாதாரணமாயமைவரிதோர் கல்வியேயாம்.

அன்றி ஒவ்வொருத்தியும் தேகாரோக்ய சாஸ்திரத்தில் ஒரு கிராமம் அல்லது கிராமத்திற்குரிய சுகாதார விஷயங்களைக் கவனித்தற்காக நியமிக்கப்பட்ட ஓர் அதி

காரிகையைக்காட்டிலும் மிகுதியாகக்கற்றுத் தேர்ந்திருக்க வேண்டும். அநேகர் தங்கள் வீட்டில் இச்சுகாதார விதிகளையெல்லாம் சிறிதும் கவனியாதாராயும் அநுசரியாதாராயும் ஒரு வஸ்துவையேனும் பரிசுத்தத்திற்குதாரணமாகக் காட்டவுமியலாதபடி புழங்கியும் மல மூத்திரம் ஒரு புறமும் வீட்டுக்குப்பையும் மாட்டுச்சாணமும் ஒருபுறமும் கிடக்க இவ்வித அசுத்தங்களைப் பக்கத்திற்பரப்பிக் கொண்டு அதன் நடுவில் தாமும் வாழ்ந்து பிணியை விலையின்றிப் பெறுகின்றனர். இங்ஙனம் விலையின்றித் தம்மிடம் வந்த பிணி விலையின்றி விலகுமோ என்பதை மாத்திரம் முன்னறியாதவராகின்றனர்.

சிலர் குழந்தைகளை அழுக்குத்தொட்டிலிலேற்றித் துயில்வித்து அசுத்த சுவாசத்தை யுட்கொள்ளும்படி செய்தும் அருவருப்பான விடங்களிற் றிரியவிட்டும் இன்னும் அவர்கள் விஷயமாய் முக்கியமாகக்கவனிக்கத்தக்கவைகளையெல்லாம் அலக்ஷியப்படுத்திக் கவனியாராயும் காற்றோட்டம் இல்லாத அறைகளிலச்சிறுவர்களைத் துயில்வித்துத் தாமுமவ்வாறு செய்தும் அதனாற்பின் விளையும்பயனை முன்னுணராதவராகி அப்பயன் தம் கண்ணெதிர்ப்பட்டபின்பே தம் கடமையைக் கருத்துடன் செய்யத்துணிகின்றனர். இவர் இவ்விஷயத்தில் இங்ஙனமிருந்து வந்தபின் காப்போராதலைக்காட்டிலும் வருமுன்னர்க்காத்தல் எவ்வளவு நன்மை. வருமுன்னர்க்காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறுபோலன்றோகெடும். ஆதலின் ஸ்திரீகள் சுகாதாரவிளக்க நூல்களைக்கற்றுத் தேர்ந்து கீழ்க்கூறிய அவ்வகைய தீங்குகட்குச் சிறிதுமிடமின்றிப் பாதுகாத்து வருவாராயின் அதுவே இலக்குமிவாழுமிடமாம். அன்றேல் அதுவே புலிகிடந்த தூறு, அதுவே நாயிருந்த கொட்டம், அதுவே பேய் நின்ற கானுமாம்.

மற்றுந் தேகாப்பியாசம் சிறிது நேரமாயினும் பிரதி தினமும் செய்யவேண்டும், இதுவும் தேகத்தில் ஓர்வித நோயும் வந்தணுகாமற்றடுப்பதற் கனுகூலமாயிருப்பதுமன்றித் தேகத்தைப்பலப்படுத்துதற்குமேற்ற தொன்றாகும்.

ஆனால் பெண்கள் ஆடவர்போல் தண்டால் பஸ்கி கஸரத் முதலிய அப்பியாசங்கள் அவசியம் செய்யவேண்டுமென்பதில்லை. நடைப்பயிற்சி முதலியவைகள் செய்யலாம். சிறு பெண்கள் கோலாட்டம் முதலியவைகளிற் பயிலுதலும் தேகப்பயிற்சி செய்தலையொக்கும். இனி, தேகப்பயிற்சியைப்பற்றி ஈண்டெழுதப்புகின் மிகவும் விரியுமாதலால் சரீராப்பியாசத்தின் முக்கியத்தையும அவ்விஷயத்தில் பெண்டிர் ஆடவர் முதலிய யாவரும் கவனிக்கத்தக்க விதிகளையும் அதன் பயனையும் குறித்து பூர்ணசந்திரோயத்தில் பின்னர் 'தேகாப்பியாசம்' எனும் தலைப்போடு எழுதி வெளியிடுகிறேன்.

இனி, குழந்தைகட்கேனும் தம் குடும்பத்தில் மற்றையயார்க்கேனும் ஏதாவது வியாதி வந்தால் அதைத் திடீரென விரைந்த முயற்சியோடு நீக்குதற்குச் சக்தியுடையளாம்படி சிறிது நாட்டு வைத்தியத்திலும் பழகியிருத்தல் அவசியம். தவிர அவர்கட்கு வேண்டிய அன்னபானாதிகளை உரிய காலங்களிற் கொடுத்தும் போஷித்து வரும் தன்மையும் நன்கறிந்தவளாயிருத்தல் வேண்டும்.

கணக்கிலும் ஓரில்லக்கிழத்திக்கு எவ்வளவு தெரியவேண்டுமோ, அவ்வளவு பயின்றிருத்தல் வேண்டும்.

ஸ்திரீகள் பயிலவேண்டிய பயிற்சிகள் இவ்வாறிருக்க "ஆறிடுமேடு மடுவும்போலாம் செல்வம்' என்றபடி செல்வம் குறைந்து தந்நிலைமாறி வறியநிலைக்கு வந்த போதினும் தம் கணவரையிழந்து அவரால் அடையும் வருவாய் குறையும் காலம் தமக்குவரினும் அப்போதும் தம்முயிரையும் தம் மக்களையும் போஷித்துப் பாதுகாக்கும் திறமையும் அம்மக்கள் பொருளீட்டும் பருவமடையுங்காறும் அவரது கல்விக்கிடையூறு வாராமல் பொருளால் ஆதரித்துக் காக்குந்திறமையும் உடையராம்படி முன்னரே பின்னல் சித்திரத்தையல் நூற்றல் முதலிய கைத்தொழில்களைப் பெற்றோர்கள் கற்றுக்கொடுத்தல் ஆவசிகம். இது தாய்தந்தையர் தங்கள் புத்திரிகட்குப் பிறசெய்யவேண்டிய முன்னுபகாரமாம்.

பெண் கல்வியைப் பற்றிக்கூறுமிச்சமயத்திலேயே அவர்கள் தந்தம் தாய் பாஷைகளைக் கற்றலவசியமா? அன்றி, அன்னிய பாஷைகளைக் கற்றல் முக்கியமா? என்பதைப்பற்றியும் ஆராய்வோம். இவ்விஷயத்தில், ஸ்திரீகள் தமிழராயிருப்பின் தமிழும் தெலுங்காயிருப்பின் தெலுங்கும் கன்னடராயிருப்பின் கன்னடமுமாக இவ்வாறு தங்கள் தங்கள் தாய்பாஷைகளையே ஆதியிற்கற்க வேண்டும் என்பது பொருந்தும். இங்ஙனம் கற்றால்தான் முதலாவது தம்மை அடுத்தாரையும் தம்மினத்தாரையும் அப்பாஷையாற் போதித்தும் கற்பித்தும் அவர்களைச் சீர்திருத்தம் செய்ய வியலும். அதன்பின் தம் நாட்டிற்குள் மிகுதியாகத் தலையெடுத்து வழங்கும் பாஷையைக்கற்றல் வேண்டும். இதுவே தேச பாஷை யெனப்படும். தேசபாஷையை நன்கு கற்றிருந்தால் தம் தேசத்தில் ஆங்காங்கு சபைகளும் பாடசாலைகளு மேற்படுத்தி அவ்வவ் விடங்களிலுள்ள பிரஜைகளுக்கேற்ற உபந்நியாசங்கள் பலவற்றைப் புரிந்தும் அவர்களுக்கேற்ற நூல்களைப் போதித்து நலவழிப் படுத்தியும் தாம் பிறந்த நாட்டிற்குத் தம்மாலியன்ற வுதவிகளைச் செய்தற்குத் தகுதியுடையவர்களா யிருக்கலாம்.

தேசபாஷையே ஒவ்வொருவரும் முக்கியமாகக் கற்க வேண்டிய தொன்றும். இங்ஙனம் தேசபாஷை கல்லாதவர் தமது நாட்டிற்கு நன்மைகள் பல புரியவேண்டுமென்றும் அதனை உயர்ந்த பதவிக்குக் கொண்டுவர வேண்டுமென்று மெண்ணுதல் இராஜ்ப மாளவிருக்கும் இளவரசிகைக்கு இரலவன் அவாவுறுதல் போலும். முடவன் கொம்புத்தேனுக்காசைப்படுதல் போலுமே முடியும்.

ஆதலால் ஒருத்தி தன் தேசபாஷையில் பூரணபாண்டித்யம் பெற்றபின்பே அன்னியதேச பாஷைகளைக் கற்றுத்தேர்ந்து பின் தன்றேயம விட்டு பிறதேயங்கட்குச் சென்று அவ்வத்தேயங்கட்குரிய பாஷைகளாற் பேசியும் உபந்நியசித்தும் ஜனசமூகங்களை முன்னேறச் செய்ய முயலுதல் நலம்.

தவிர ஒரு பாஷையில் பூரணவித்வத்வ மடைந்த ஒருவன் அல்லது ஒருத்திக்கு இதர பாஷைகள் கற்பது மிகவும் எளிதென்பது ஈண்டறியத்தக்கது.

ஒருவர்க்குத் தமது வறியதசையில் அல்லது ஆபத்தி லுதவுதலிலும் தான் அறியாத விஷயங்களையெல்லாம் அறிவிப்பதிலும் கவலைகளுற்றுழிக் கைகொடுத்துத் தேற்றுதலிலும் ஓர் ஆப்த நண்பனை யொப்பதும், தமது அஞ்ஞான விருளையகற்றி ஞானவொளியைக் கொடுத்தலில் குருவை யொப்பதும், தன்னைப் போதித்து நல்வழிப் படுத்துதலில் தந்தையை யொப்பதுமாகிய இக்கல்வியின் பெருமைகள் யாவற்றையும் நம் இந்தியர் யாவரும் நன்குணர்ந்து தங்கள் பெண்களைக்கல்வி பயிற்றுவிப்பாராக.

(இன்னும் வரும்.)

டி. யம் மொகயதீன் கவிராயர்.

புத்தக வரவு.

(i) பிரிடிஷ் அரசாட்சியும் இந்தியாவின் வித்யாபிவிருத்தியும் (2) ஸ்வராஜ்ய ஸமாஜம் (3) ஒப்பந்தக்கூலிச் சட்டம் (மிஸ்டர் ஆண்டுரூஸ் அவர்களின் பிரசங்கத்தின் மொழி பெயர்ப்பு.) மதுரை ஹோம் ரூல் லீக் சங்கத்தார்களால் துண்டுப் பத்திரிகைகளாகவெளியிடப்பட்டவை. 1-வது துண்டுப் பத்திரிகை சென்னை "ஹோம் ரூல் லீக்" 13-வது துண்டுப் பத்திரிகையின் மொழி பெயர்ப்பு. எளிய தமிழ் நடையில் சாதாரண ஜனங்களுக்குப் பயன் படுமாறு எழுதி மேற்கண்ட சங்கத்தாரால் பிரசுரிக்க பெற்றிருக்கின்றன. துண்டுப் பத்திரிகைகள் 10 பிரதி 4 அணுவுக்கும், 100 பிரதி ரூ-1—8—0-க்கும் வேண்டுவோர் மேற்கண்ட மதுரை ஹோம் ரூல் லீக் காரியதரிசி யிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

அங்கம் 4. களம்—2.

காலம்—காலை. இடம்—பிருந்தாவனத்திலுள்ள வோர் சத்திரம். நாடக பாத்திரர்கள்—மீராபாய் காஷாய உடை தரித்தவளாய் அநேக ஜனங்களுக்குப் பிரசங்கம் செய்து கொண்டிருக்கிறாள்.)

மீரா.—இன்னு மேதாவது கேட்க வேண்டியிருந்தால் கேளுங்கள். என்னாலானமட்டு மதற்கு உத்தர மளிக்கின்றேன்.

முதல் சாமான் வாங்குவோன்—அம்மா, நமக்கு கர்ம பந்த மேற்படாதிருக்கும் பொருட்டு நாம் தான் நிஷ்காம்ய கர்மங்களைச் செய்யவேண்டும். நிர்வாணத்தை யடைந்தவர்கள் கூட பலாபேக்ஷையின்றி ஜகத்துக்காக உழைப்பதாகச் சொன்னீர்களே, அவர்களெதற்காக அப்படி யுழைக்க வேண்டும், ?

மீரா.—அவர்களுடையபதவியை யடைந்தவர்களுக்குத் தானந்த விசேஷம் நன்றாய்த் தெரியவரும். கிஞ்சித்ஞர்களான காமநைக்கிரஹிப்பது கஷ்டம். ஆயினும் நம்மாலானவரைக்கு மதைக் குறித்து விசாரித்துப் பார்ப்போம். நிர்வாணத்தை யடைந்து நிற்கும் ஜீவன் முக்தர்களப் பதவியிலிருந்து இந்த ஜகத்தைப் பார்க்குமிடத்து, "கணக்கில்லாத என் சகோதரர்களஞ்ஞான சாகரத்தில் மூழ்கித் தவித்துக் கொண்டிருக்க நான் மட்டுமிங்கு ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டுமா? இப்பதவியை யடைய வழி யறியாம லவர்கள் பரிதபித்துக் கொண்டிருக்கும் போதெனக் கிங்கே ஆநந்தம் வேறு வேண்டுமா? இந்த ஆநந்தத்தை யடையும் வழியை யவர்களுக்குக் காட்டி அவர்களந்த வழியில் நின்று முன்னுக்கு வந்து இந்த நிர்வாணத்தை யடைந் தாநந்திப்பதைப் பார்ப்பதை விட வேறாநந்த மெனக்குண்டா? அப்படிச்

செய்ய எனக்கிந்த நிர்வாணத்தை தியாகம் செய்யவேண்டி வரினும் பாதகமில்லை. அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது நானிங்கே யனுபவிக்கு மாநந்தம் அவர்களாநந்திப்பதை நான் கஷ்டப்பட்டாகிலும் பார்க்கும்போதுண்டாகு மாநந்தத்திற் கெதிரி லெம்மாத்திரம்?" என்கிற எண்ணம் அவர்களுக் குண்டாகிறதாம். ஆகவே தாங்களறியவேண்டிய விஷயமொன்று மில்லாதிருந்தும், தாங்களுழைக்கவேண்டிய நிர்ப்பந்தம் யாது மில்லாதிருந்தும் நம்மைப் பாதுகாத்து ரக்ஷிக்கும் பொருட்டு நம் மத்தியில் ஸ்தூல லோகத்திலும் சூக்ஷ்ம லோகங்களிலும் இருந்து கொண்டு ஜகத்துக் குழைத்துக்கொண்டு வருகிறார்கள்.

மற்றும் சிலர் தங்களிடத்திலிருக்கும் பகவத் குணங்களை வெளிப்படுத்தி யபிவிருத்தி செய்யாமலும், ஸ்ரீ சங்கரர், புத்தர் முதலிய ஜகத்தருக்க ளடைந்த பதவியை யடைய முயலாமலும், தங்களுக்கு மட்டுமிந்த ஜனன மரணப் பிணியிலிருந்து மோக்ஷம் கிடைக்கவேண்டுமென்பதை மாத்திரம் முன்னிட்டு சர்மபந்தத்தை யறுத்துவிட்டு ஜகத்தைப் பற்றி யொன்றும் கவனியாமலிருக்கிறார்கள். இம் மோக்ஷம் மோக்ஷமா? அதை யடைந்திருந்தாலென்ன, அடையாமற் போனாலென்ன? இப்படிப் புனர் ஜன்மமில்லாமலிருப்ப தெவ்வளவு காலத்துக்கு? ஒருமன்வந்தரம், அல்லதொரு கற்பம். அதற்குப் பிறகவர்கள் திரும்பி வரவேண்டியது தான், சகல ஜீவர்களு மீசுவரனோ டைக்கியத்தை யனுபவிக்கவேண்டிய தீசுவர சங்கற்பமானதாலதைத் தடுத்து ஜகத்தின்கண்ணிருக்கும் ஜீவர்கள் தன்னின்றும் வேறு என எண்ணித் தன்னுடைய ஹிதத்தை மட்டுமபேக்ஷிக்கிறவர்க ளெப்படி சாசுவதமாயிருக்கும் முக்தியை யடைய முடியும்? ஸர்வ பூதஹிதர்களாயிருக்கிற ஜீவன் முக்தர்கள் தங்களுக்கினி வரப்போகிற மன்வந்தரம், கற்பமிவைகளிலுள்ள அபிவிருத்தியையு மிங்கேயே சம்பாதிக்கிறார்கள். தாங்களும் மற்ற ஜீவராசிகளும் ஒன்றுதா

னென்பதை யுணர்ந்திருக்கிறார்கள். மேலும் (கதவிருக்கும் பக்கம் திரும்பிப் பார்க்கிறாள். எல்லோரும் பார்க்கிறார்கள். சுந்தரீ, ஏகநேத்திரன், அகிலூடன் இம்மூவரும் வருகிறார்கள். சுந்தரீ மீராவின் காலில் வீழ்கிறாள்.)

மீரா.—(எடுக்க முயன்றுகொண்டே) சுந்தரீ, இதென்ன, எழுந்திரு. நான் காண்கிறது கனவா?

சுந்.—(காலில் விழுந்தபடிக்கே)நன்றியறிவு கெட்ட இந்த நாயைப் பாதுகாப்பதாக வாக்களித்தாலன்றி நானெழுந்திரேன்.

மீரா.—சுந்தரீ, பிதற்றுகிறாயா? எழுந்திரேன்.

சுந்.—நான் செய்திருக்கும் பாதகங்களை மறந்தென்னை மன்னிப்பதாக வாக்குத் தத்தம் செய்தாலன்றி நானுயிருடனிரேன்.

மீரா.—வாக்களித்தேன், எழுந்திரு. (சுந்தரீ எழுந்திருக்கிறாள்) என்னம்மா சுந்தரீ? என்ன சமாசாரம்? இதென்ன அலங்கோலம்? இங்கெங்கு வந்தாய்? எதற்காக வந்தாய்? என்காலில் வீழ்வானேன்? என்னை மன்னிப்பைக் கேட்பானேன்? எனக்கொன்றும் புரியவில்லையே.

சுந்.—உன் முகத்தைப் பார்த்து உன்னிடம் பேசக்கூட இந்தப் பாபிக்கு யோக்யதையுண்டா? மிருகத்திலும் கேடுகெட்ட இந்தப் பாபிக்கு உன்னைத் திரும்பவுமிக் கண்களினால் பார்க்கப் பாக்கியமிருந்ததே!

மீரா.—சுந்தரீ, (தனக்குள்) இதென்ன, இவளுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதா, என்ன? (ஜனங்களை நோக்கி இவளென் சகோதரி, நானவளை யாச்வாசப்படுத்தவேணும் நீங்களிப்போது விடைபெற்றுக் கொள்ளுங்கள். திரும்பவும் சாயந்திரமிங்கு சந்திப்போம். (ஏகநேத்திரன் அகிலூடன் தவிர மற்றெல்லோரும் போகிறார்கள்)சுந்தரீ, சமாசாரத்தைக் கோவையாயுரை. என்ன எல்லாமோ சொல்லிக் கொண்டிருக்கிறாயே.

சுந்.—சொல்லுகிறேன் கேள், நான் சொல்லி முடித்த பிறகுகூட இப்படியே என்னுட னன்பு பாராட்டுவாயா?

மீரா.-என்னம்மா சுந்தரீ, இபபடிக் கேட்கின்றாய்? உன்னிடத்திலெனக்குள்ள அன்பு ஒரு நாளும் எக்காரணத்தினாலும் மாறுபடாதே.

சுந்.—அது எனக்குத் தெரியும். இருந்தபோதிலுமிந்தப் பாபி மனது கேட்கிறதா? மீரா, அதைச் சொல்ல என்னா வஞ்சுகிறதம்மா, பதறுகிறதம்மா.

மீரா—சுந்தரீ, இதென்ன. கூசாமலதைச் செல்லாம்மா.

சுந்.—ஆதிமுதல் உனக்குத் துரோகம் நினைத்து மஹாராஜாவுக் குன்மீது வெறுப்பை யுண்டாக்கி, இந்த ஏகநேத்திரனையு மதி மூடனையும், பாம்பையு முன்னைக் கொல்லும்படி அவரை யனுப்பிக்கச் செய்து, கடைசியிலுனக் காதமஹத்தி செய்ய உத்திரவு கொடுக்கும்படி யவரைத் தூண்டினது இந்த (மீராபாயின் காலகளில் விழுகிறாள். மீராபாயவளைத் தூக்கி யெடுத்துத் தேற்றுகிறாள்.)

மீரா.—சுந்தரீ, இதனாலென்ன, ஒரு பாதகமுமில்லை. நீ தைரியமாயிரு. வருத்தப்படாதே.

சுந்—நான் சொன்னது முழுவதையும் கேட்டாயா?

மீரா.—கேட்டேன்.

சுந்.—கேட்டபின்பு கூட உனக்கென்மீது வெறுப்புண்டாக வில்லையா?

மீரா.—நான் முன்னமே சொன்னேனே. உன்னை நான் வெறுப்பதேன். இதை யெல்லா வற்றையும் நானனுபவிக்க வேண்டிய காலம். நீ யென்ன செய்வாய்? பகவ தாக்ஞையை நிறைவேற்றும் பொருட்டொரு கருவியாயிருந்தாய், அவனுடைய இச்சை யிலலாம லொருபுற் கூட அசைய மாட்டாது.

சுந்.—மீரா, மீரா, உனக்கு நான் துரோகம் நினைத்தே னே. நானெப்படிப்பட்ட பாதகியம்மா!

மீரா.—இதை யெல்லாம் மறந்துவிடு. மஹாராஜா சௌக்கியமாயிருக்கிறாரா? நீயுமிப்படி வந்துவிட்டாயே, ஐயோ! அவரென்ன செய்வார்?

சுந்.—மஹாராஜாவாம், பெயரைப்பாரு.

மீரா.—சுந்தரீ, இதென்ன, அவரை நிந்திக்கின்றாய்?

சுந்.—மீரா, என்னை யிதற்கு மன்னிப்பாய். நான் கோபத்தா லுளருகிறதைக் குறித்து வருத்தப்படாதே. ஆம் அவர் மீதென்ன குற்றம்? நானல்லவா இதெல்லா வற்றிற் கும் காரணம்.

மீரா.—இப்பவாவது அவருக் கென்மீதுள்ள கெட்ட எண்ணம் நீங்கி யிருக்குமா?

சுந்.—எனக்குத் தெரியாது. அதிருக்கட்டும். தேவி பிரத்தியக்ஷ மானதிற்குப் பிறகு நடந்ததை யெல்லாம் சொல்லு.

மீரா.—அதுனக்கெப்படித் தெரியும்?

சுந்.—உன்னுடன் யமுனை வரையில் வந்தேன். அம்பாளைக் கண்டவுடன் மூர்ச்சை யடைந்தேன். விழித்துப் பார்க்க உன்னைக் காணோம். பிறகு ராணாவிடம் சென்று என் வயிற்றெறிச்சல் தீர அவரைத் திட்டிவிட்டு உன்னைத் தேடிப் புறப்பட்டேன். உன் சமாசாரத்தைச் சொல்.

மீரா.—இப்போ தவர திகமாய் வருத்தப்பட்டுக்கொண் டிருக்கிறாரென்றே எண்ணுகிறேன். ஏனெனில் இரண்டு மூன்று தினங்களாக அவரைப் பற்றி யடிக்கடி ஞாபகம் வந்து கொண்டிருக்கிறது. அப்படிஞாபகம் வரும்போ தெல்லா மெனக் கேதோ மனக்கலக்க முண்டாகிறது. என் சங்கதியைக் கேட்டாயே. ஜகதம்பிகை யென்னைத்

தூக்கியெடுத்து, "மீரா, நீ யிப்படி யிறப்பது சரியல்ல இன்னு மிவ்வுலகில் நீ கொஞ்ச காலமிருந்து அநேகம் ஜனங்களுக்குப் பக்தியைப் புகட்டி, பச்சாத்தாபப் படப் போகிற உனது பர்த்தாவுடனில்வாழ்க்கையிலு மிருந்து பிறகென்னிடம் வருவாய். இப்போதுன் மனதிற்குத் தோன்றினபடி நாடுதோறு மலைந்து திரிந்து ஆங்காங்குள்ள வர்களுக் கீசுவர பக்தியின் பெருமையை யெடுத்துரைத் துக் கொண்டிரு." என்றெனக் காக்ஞாபித்து விட்டு மறைந் தாள். அதன் படியே நானுமலைந்து கொண்டிருக்கிறேன் இப்போ தவரங்கே என்ன கஷ்டப்படுகிறாரோ, அறியேன்.

சுந்.—அவருக்குத் தான் செய்தது தவறென்று தெரிந் திருந்தா லொரு க்ஷணமேனும் தக நகரத்தில் தாமதியார். கட்டாய முன்னைத் தேடி வருவார்.

மீரா.—பகவானுடைய லீலை யிதவ்வளவும். நீ யுன்னை யெவ்வளவு நொந்து கொண்டாலும் நீ பாக்யசாலி தான். உன்னாற்றானே நானிவ்வளவு தேசங்களுக்குச் சென்று பக்தி யைப் பற்றிப் பிரசங்கம் செய்யும் பாக்பத்தைப் பெற் றேன். உன்னாற்றானே யிந்த ஏகநேத்திரனு மதிமூடனும் ஸன்மார்க்கத்தை யடையலுற்றார்கள். உன்னாற்றானே என க்கு ஜகதம்பிகையை--என்னம்மா, தலையைப் பிடித்துக்கொ ள்ளுகிறாய். தலை நோவுகிறதோ? உள்ளேபோ யேதாவது பானம் செய்தாலெல்லாம் சரியாய்விடும். போகலாம் வா. ஏகநேத்திரா, அதிமூடா, நீங்களிங்கு மததியானம் வாருங்கள்.

(எல்லோரும் போகிறார்கள்.)

(காட்சி முடிகிறது.)

(இன்னும் வரும்.)

ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர், எம். ஏ.

பகவத்பக்தியும் தேஜஸும்*

விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் விஷ்ணுவுக்கு சிவனென்பதாகவும் சிவ ஸஹஸ்ரநாமத்தில் சிவனுக்கு விஷ்ணு என்பதாகவும் நாமங்களிருக்கின்றன. சிவன்பெயர் விஷ்ணுவுக்கும் விஷ்ணுவின் பெயர் சிவனுக்கும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. வைஷ்ணவ புராணத்தில் மஹா விஷ்ணுவர்ணனைக்கும் சைவபுராணத்தில் ஸதா சிவ வர்ணனைக்கும் கொஞ்சமேனும் பேதம் காணமுடியாது. சிவகேசவர்களென்ற நாமங்கள் முடிவில் ஒரே தத்துவத்தை அதாவது நிர்க்குண, நிரஞ்சன, நிருபாதிக பிர்ம்மத்தைப் போதிக்கின்றன. ஆகையால் விஷ்ணு பக்தியைக் குறித்து எழுதுவதை சிவ பக்திக்கும் அந்வயப் படுத்திக்கொள்ளலாம்.

ஸ்ரீமஹாவிஷ்ணு, பரமதயாநிதி. இந்த பரமபுருஷர் ஈசுவராற்புத சக்தியால் சகல சராசர பூதங்களை தன்னுடைய ஸாந்நித்யத்திற்கு ஆகர்ஷித்துக் கொள்ளுகிறார். ஸர்வகாலங்களிலும் சர்வாவஸ்தைகளிலும் ஜீவகோடிகளைப் பரிபூர்ணர்களாக்குவதற்காக மஹா தயையோடு வீக்ஷித்து பூலோகத்தில் ராமகிருஷ்ணாதி அவதாரங்களை யெடுத்து ஜீவர்களை துஷ்ட சரீரங்களினின்று விலக்கி கிரமக்கிரமமாய் பரிசுத்தர்களாகச் செய்கிறார். சாதுக்களை ரக்ஷித்தல், தர்மத்தை ஸ்தாபித்தல், துஷ்டர்களின் துஷ்ட புத்திகளைப் போக்கடித்துப் பரிசுத்தர்களாகச் செய்தல சமஸ்த ஜீவகோடிகளைக்கிரமமாகப் பரிபூர்ணர்களாகச்செய்தல் ஸ்ரீ மஹாவிஷ்ணு மூர்த்தியின் தொழில். துஷ்டர்களை சிக்ஷித்தல் அவர்களிடமுள்ள தயையினுலொழிய வேறில்லை. விஷ்ணுமூர்த்தி தயாஸ்வரூபர். சர்வபூதங்களினிடத்தும் தயையே இம்மஹாபுருஷனின் முக்கியகுணம். தயையே இவர். இவரே தயை. சர்க்கரைப் பொம்மையில் எந்தப்பாகமானுலும் தித்திப்புக் குணத்தால் நிறைந்திருப்பதுபோல் இம் மஹானுபாவரின் ரூப மெல்லாம் தயையால் நிறைந்திருக்கிறது. மோக்ஷத்தைக் கோரும் ஜீவன் விஷ்ணு ஸ்வரூபத்தை

---

* கடப்பைத தத்துஞான சபை 5-வது துண்டுப்பத்திரிகை வி. ராமசந்திர நாயுடு அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.

அடைவதற்குப் பிரயத்தனம் செய்யவேண்டும். விஷ்ணு தயாஸ்வரூப னாகையால் ஜீவன்கூட தயாஸ்வரூபனாதல் வேண்டும். கோடீஸ்வரனாக வேண்டுமென்பவன் எப்படி ஒவ்வொரு ரூபாயையும் சேர்த்துக் கோடிரூபாய்களைச் சம்பாதிக்க வேண்டுமோ அப்படியே ஜீவன் தயாஸ்வரூப னாவதற்கு ஆரம்பத்திலிருந்து தான் செய்யும் பிரதிகாரியத்திலும் பூததயையை அப்யஸித்தல் வேண்டும். ஈசுவர பக்திக்குப் பிரதமதர்மம் பூததயை. பூததயை இல்லாதவன் விஷ்ணு பக்தனாகான். பூததயை அஸ்திவாரத்தைப் போன்றது. பூததயையை அப்யஸிக்கின் சீக்கிரத்தில் விஷ்ணுஸ்வரூபர்களாவோம். பூததயை இல்லாத பக்தி பக்தியாகாது. அதாவது பக்தன் காமக்குரோதங்களை விட்டொழித்து, அஹங்கார மமகாரங்களைத் தொலைத்துப் பலத்தைக் கோராமல் பக்திஞான கர்மங்களை அநுஷ்டித்து அதனாலேற்படும் புண்ணியத்தை ஈசுவரனுக்கு அர்ப்பணஞ்செய்து ஜீவகோடிகளைப் பரிசுத்தர்களாகச் செய்யவேண்டு மென்பதாக ஸ்திரசித்தனாகி சதா தியானித்துக்கொண்டு எல்லோருடைய நன்மைக்காகப் பூலோகத்தில் பாடுபடுதலே பூததயை. இப்படிப்பட்டவன் பரிசுத்தனும் தேஜஸ் ரூபனுமாவான். இதுவே ராஜயோகம். இதுவே உண்மையான விஷ்ணு பக்தி. இதுவே நிஜமான சிவபக்தி. கீதை. அ. 5. சு. 29; அ 12, சு. 4.

விஷ்ணு பக்தியால் பவித்திரமானதும் பணதிற்குச் சாந்தமுண்டாகக் கூடியதுமான தேஜஸ் பக்தனிடம் விருத்தியாகும். இத்தேஜோ மஹிமையாலே இவ்வித பக்தன். சமீபத்திற்குச் செல்பவனும் சத்புத்தி சாந்தமுள்ளவனாவன். இவன் ஸ்பரிசிக்கும ஆகார வஸ்துக்களை கிரஹிப்பவர்களுக்குக்கூடப் பரிசுத்தம் நல்லபுத்தி உண்டாகும். ஆகையால் தேஜஸ் எனின் என்ன? அதன் தர்மங்களெவை?

தேஜஸ்

பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவைச் சுற்றிலும் கோளாகாரமான ஒரு தேஜஸ் அதாவது ஒளி இருக்கிறது. தீபமுள்ள லாந்தரைச் சுற்றிக் கொஞ்சதூரம் வரைக்கும் வெளிச்சம் வியாபித்திருக்கிறதல்லவா. லாந்தர் இவ் வெளிச்சத்தின் மத்தியில் இருக்கும். லாந்தர் நகரும்போதெல்லாம் வெளிச்சமும் அதை அனுசரித்தே செல்லும். இவ்வாறு லாந்தரைச் சுற்றியுள்ள ஒளியைப்போல பிரதிவஸ்துவைச் சுற்றியும் அதாவது கல், செடி, ஜந்து, மனுஷ்யர்கள், தேவதைகள் ஆப்ரம்மஸ்தம்ப பரியந்தம் உள்ள ஒவ்வொருவஸ்துவையுஞ் சுற்றி அந்தந்தவஸ்துவுக்குத் தக்கதேஜஸ் இருக்கிறது. இந்த தேஜஸ்ஸை இங்கிலீஷில் (Aura) 'ஆரா' என்பர்.

கல்லுக்கும் தேஜஸ் இருக்கிறது. அப்படியே செடி, ஜந்து பிரதிவஸ்துவுக்கும் அதற்குண்டான வேறு வேறுவிதமான தேஜஸ் இருக்கிறது. இந்தத்தேஜஸ் நமது ஸ்தூல திருஷ்டிக்கு அகப்படாது. குருடன் சூரியவெளிச்சம் இல்லையென்றாலும் நேத்திரங்களுள்ளநமக்கு சூரியவெளிச்சம் பிரத்யக்ஷமாகத்தோன்றுமல்லவா? அவ்விதமே எல்லா வஸ்துக்களுக்கும் பூத கோடிகளுக்குமுள்ள தேஜஸ் திவ்யதிருஷ்டியில்லாத நமக்கு அகப்படாமற் போனாலும் திவ்யதிருஷ்டி யுள்ளவர்கள் அந்தந்த வஸ்துவின் தேஜஸைப் பார்த்து அந்த தேஜஸ் மூலம் அந்தவஸ்துக்களின் குணங்களைத் தெரிந்து கொள்ளுவார்கள். இவ்விதமே மனுஷ்யர்களின் தேஜஸைப்பார்த்து அந்த மனுஷ்யர்களின் குணங்களைக் கண்டு கொள்ளுகிறார்கள். சில வஸ்துக்களிடம் கெட்ட தேஜஸ், சிலவஸ்துக்களிடம் சாதாரண தேஜஸ், சிலவற்றில் பரிசுத்த தேஜஸ் இருக்கின்றன. தேஜஸ் அநேக பேதங்களுள்ளதா யிருக்கும்.

துளசியிடத்தும் புஷ்பக்கிளிடத்தும் பரிசுத்தமான விஷ்ணு தேஜஸ் இருக்கிறது. வில்வம் உருத்திராக்ஷங்களில் பவித்திரமான சிவதேஜஸ் இருக்கின்றது. இவற்றைத் திவ்

யதிருஷ்டியுள்ள ரிஷிகள்பார்த்துத் துளசி விஷ்ணுவிற்கும் வில்வம் உருத்ராக்ஷங்கள் சிவனுக்கும் பிரியமென்பதாக வெளியிட்டிருக்கிறார்கள். இவ்விதமே அநேக பூஜார்ஹமுள்ளதும் போஜனார்ஹமுள்ளதுமான வஸ்துக்களின் தேஜஸின் குணத்தை தெரிந்துகொண்டு தான் ரிஷிகள் சாஸ்திரங்களில் வரைந்திருக்கிறார்கள்.

ஆகையால் மனிதனுடைய தேஜஸையும் தர்மங்களையும் நாம் நன்றாய்த் தெரிந்துகொள்வது மிகவும் அவசியம். ஒரு லாந்தரில் வெள்ளை மத்தாப்பு கொளுத்தின மாத்திரத்தில் அந்த லாந்தரைச்சுற்றி வெள்ளை வெளிச்சம் கொஞ்ச தூரம்வரைக்கும் வியாபித்திருக்குமல்லவா? அந்த லாந்தரை எங்கு கொண்டுபோனாலும் அந்த வெளிச்சம் அதை அனுசரித்தே செல்லும். அந்த லாந்தரில் வெள்ளை மத்தாப்பை எடுத்துவிட்டு சிவப்பு மத்தாப்பைக்கொளுத்தினால் வெளிச்சம் சிவப்பாகி லாந்தரைச் சுற்றி வியாபிக்கும். இவ்விதமே நீலம் பச்சை இவ்வித மத்தாப்புகளைக் கொளுத்தினால் வெளிச்சத்தின் நிறமும் மாறிக் கொண்டே வரும். மத்தாப்பின் நிறம் மாறுதலுக்குத் தக்கவாறு லாந்தரைச் சுற்றியுள்ள வெளிச்சமும் மாறும். பிரதி ஜீவனுடைய சரீரத்தைச் சுற்றிலும் லாந்தரைச் சுற்றியிருப்பதைப் போலவே தேஜஸ் இருக்கிறது. மனிதனுடைய சரீரமே லாந்தராகவும் மனதையே மத்தாப்பு வத்தியாகவும் பாவித்தல் வேண்டும். லாந்தரைச் சுற்றியுள்ள ஒளியின நிறம் மத்தாப்புவத்தி மாறுவதைப் போல் எப்படி மாறுமோ அவ்விதமே மனிதனுடைய மனம் மாறுவதற்குத் தக்கபடி மனிதனுடைய சரீரத்தைச் சுற்றியுள்ள தேஜஸும் மாறும். இத்தேஜஸ் ஏகதேசம் இரண்டடி தூரம் வரைக்கும் சரீரத்தைச்சுற்றி எல்லாப் பக்கமும் வியாபித்து ஒளியின் மத்தியில் லாந்தல் இருக்குமா போல் தேஜஸ் மத்தியில் சரீரம் இருக்கும். இத்தேஜஸ் கோழி முட்டையைப் போல் கோளாகாரமாயிருக்கும். இது திவ்ய த்ருஷ்டியுள்ளவர்களுக்குப் புலப்படும்.

மனம் மாறுகிறபடி தேஜஸின் வர்ணமும் மாறும். மனதினிடத்து கோபம் ஜனிக்கின் சரீரத்தைச் சுற்றியுள்ள தே

ஜஸ் ரக்தவர்ணமாக மாறும். விபசாரசங்கல்பம் ஜனிக்கின் செம்பருத்திப்பூவர்ணமாக மாறும். ஸ்வப்ரயோஜன ஸ்வலாபங்களுக்கு நாரத்தம்பழ நிறத்தைப்போல் மாறும். தெய்வ பக்தியுள்ளதாக மாறினால் தேஜஸ்நிறம் நீலவர்ணமுள்ளதாக மாறும். சர்வபூதங்களிடத்தும் தயையுண்டாகி உலக நன்மைக்காக சதா கிபாலித்துக் கொண்டு பாடுபடும் ராஜயோகியின் தேஜஸ் பளிங்கைப்போல் வெள்ளையாக இருக்கும். தேஜஸ்வில் உள்ள மாறுதல்கள் திவ்யதிருஷ்டிக்குப் புலப்படும். இதனால் திவ்ய திருஷ்டியுள்ளவர்கள் மனதின் ஸ்திதியை அறிந்து கொள்ளுகிறார்கள். ஆகையால் மனம் மாறும் போதெல்லாம் இந்தேஜஸ் மாறிக்கொண்டிருக்கும். இது தேஜஸின் தர்மம். சாந்திபர்வத்தில் பிருகு, பரத்வாஜ சம்வாதத்தை வாசித்தல் வேண்டும்.

தேஜஸ்விற்கு மற்றொரு தர்மம் இருக்கிறது. சாதாரணமாக இந்த தேஜஸ் பிரதிஜீவனைச் சுற்றிச்சுமார் இரண்டடிதூரம் வரைக்கும் வியாபித்திருக்கும். கோபியாயிருப்பவன் சாந்தனுடைய சமீபத்திற்கு வருவானாகில் கோபியின் கோபதேஜஸூம் சாந்தனின் சாந்ததேஜஸூம் ஒன்றோடொன்று தாக்கிக்கலக்கும். வெள்ளைஜலமுஞ் சிவப்புஜலமும் கலந்தமாத்திரத்தில் வெள்ளைகொஞ்சம் சிவப்பாகவும் சிவப்பு கொஞ்சம் வெள்ளையாகவும் மாறும். வெள்ளைஜலம் விசேஷமாகி சிவப்புஜலம் கொஞ்சமான மாத்திரத்தில் சிவப்பு வெளுப்பாக மாறும். அவ்வண்ணமே கோபியானவன் சாந்தனுடைய சமீபத்திற்கு வரவே கோபியின் கோபதேஜஸ் கொஞ்சம் சாந்ததேஜஸாகவும், சாந்தனுடைய சாந்ததேஜஸ் கொஞ்சம் கோபதேஜஸாகவும் மாறும். இவ்விதம் மாறுதல்கள் நமக்குத்தெரியாமலே ஏற்பட்டுக் கொண்டிருக்கும். தேஜஸ் மாறுகிறபடி மனதும் மாறுமாகையால் கோபிக்குக்கொஞ்சம சாந்தமுண்டாகும். சாந்தனுக்குக் கொஞ்சம் கோபபுத்தி ஜனிக்கும். இவ்விதம் விசேஷ கோபமுள்ளவனுடைய சமீபத்திற்கு கொஞ்சம் சாந்தமுள்ளவன் வரின் அவனுடைய சாந்ததேஜஸை கோபதேஜஸ் நாசஞ்செய்து அவ்வித சாந்தன்கூட கோபியாவான். விசேஷ சாந்தமுள்ளவன் சமீபத்திற்கு கொஞ்சம கோபமுள்ளவன்வரின் சாந்த

தேஜஸ் கோபதேஜஸை நாசஞ்செய்து கோபியின் தேஜஸை சாந்ததேஜஸாக மாற்றும். ஆகையால் கோபி சாந்தனாவன். மஹாஞானியும் சாந்தனும இந்திரிய நிக்ரஹம் பூததயை யுள்ளவனுமான ராஜயோகியின் சமீபத்திற்கு துர்விர்த்தி யுள்ள மனிதன் போவானாகில் இவனுடைய துஷ்ட தேஜஸ் கொஞ்சம பரிசுத்தமாகி இவனுக்கு சத்புத்தி ஜனிக்கும்.

ஒரு வீட்டிலுள்ள ஸ்திரீபுமான்கள் துஷ்டவிர்த்தியுள்ளவர்களாயிருப்பார்களானால் இவர்களுடைய சந்ததியார்களுக்கும் இவ்வீட்டிற்கு வருபவர்களுக்கும் இவர்களிடம் அன்னபானாதிகளை கிரஹிப்பவர்களுக்கும் துஷ்ட தேஜஸ் வியாபிக்கும். இதன்றி இந்த துஷ்ட தேஜஸ் அயல் வீட்டுக்காரர்களுக்கும் அதன்மூலம் கிராமம் முழுமைக்கும் இதர கிராமங்களுக்கும் வியாபித்து ஒரு வீட்டிற்கு நெருப்பு வைத்தால் அடுத்தவீடும் கிராமமுழுமையும் இன்னும் பக்கத்துக்கிராமங்களும் எரிந்துபோகும் மாதிரி இந்த துஷ்டதேஜஸ் மானிடகோடிகளுக்கும் வியாபிக்கும். மாரி, பிளேக் முதலான ஜாட்யங்களைப்போலவே இவர்களின் துஷ்டதேஜஸ் அநேகர்களுக்கு வியாபித்து துஷ்டபுத்தியை உண்டுபண்ணும். இவ்வித தோஷம் இதர ஸ்திரீபுமான்களையும் அடையுமேயொழிய, கெட்டஎண்ணமுள்ள ஒருவன் தான் கெடுவதோடு, உலகமுழுவதையும் கெடுப்பான். ஒரு வீட்டிலுள்ள ஸ்திரீ பரமபதிவிரதையாகவும் புருஷன் சத்புருஷனாகவும் இருக்கின் அவர்களுடைய பரிசுத்ததேஜஸ் சம்பங்கிப்பூவின் நல்ல வாசனையைப் போல் மேற்சொல்லிய வண்ணம் அநேகர்களுக்கு வியாபித்து அவர்களுக்கு சத்புத்தியை உண்டுபண்ணி மனுஷ்யகோடிக்கு நன்மையுண்டு பண்ணும். ஆகையால் நாம் சதாதயையுடன் கூடின பக்தியை அதாவது ராஜயோகத்தை அப்யஸிக்கின் நாம் பரிசுத்தர்களாகி உலகத்தை பரிசுத்தம் செய்வோம். மனிதனுடைய மனமானது சர்வகாலத்திலும் சும்மா இராது. ஏதாவது ஒரு சங்கல்பத்தை சங்கல்பித்துக்கொண்டிருக்கும் சுபாவமுள்ளதாதலால் பிரதிமனிதனும் லோகநாசகனாயாவது லோகோபகாரியாகவாவது இருப்பானேயொழிய வேறில்லை.

ஆகையால் துஷ்டவிர்த்தியை ஒழித்து சதா சத்விர்த்தியை அப்யஸிக்க வேண்டும்.

இக்காரணம் பற்றியே மனிதன் போஜன காலத்தில் ஈசுவரதயானம் செய்யின் இப்பரிசுத்த தேஜஸ் இவன் புசிக்கும் அன்னங்களின் மேற்பட்டு அவைகளைப் பரிசுத்தமாகச் செய்து இவனுடைய சத்புத்தியை இன்னும் அதிகமாகச் செய்யும். இப்படிக்கன்றி இதற்கு விரோதமாகப்ரவிர்த்திக்கும் நாம் புசிக்கும் அன்னம் அபரிசுத்தமாகி துஷ்டபுத்தியையுண்டுபண்ணும். சமையல் செய்பவருமபரிமாறுகிறவரும் தேவனை த்யானித்துக் கொண்டு வேலைசெய்ய வேண்டும். அப்போது அன்னம் பரிசுத்தமாகும். இதைப்புசிப்பவர்களுக்கு நல்ல புத்தியை உண்டாக்கும். இபபுண்ணியம் இவர்களுக்கு லபிக்கும்.

மடிகட்டிக் கொள்ளும்போது மனதை இதர விஷயங்களில் செல்லவிடாமல் ஈசுவரனை தியானித்துக் கொண்டிருக்க வேண்டும். இல்லாவிடில் தேஜஸ் கெட்டதாக மாறும். மடியினால் பிரயோஜன முண்டாகாது.

துன்மார்க்கர்கள், ஹீனசங்கல்ப முள்ளவர்கள் சங்கத்திற்குசெல்லும்போது நாம் சிறிது நேரம் ஸ்திரசித்தத்துடன் பகவானை தியானித்து துஷ்ட தேஜஸ் நம்மை அணுகாவண்ணம் ரக்ஷையாயுள்ள ஒரு தேஜகவசம் (Auric Shell) ஏற்பட வேண்டுமென்று திருடமாக சங்கற்பிக்க வேண்டும். அவ்விதம் சங்கற்பிக்கின் தேங்காயிலுள்ள ஜலத்தை ரக்ஷிக்கும் கொட்டாங்கச்சியைப்போல் நமது தேஜஸ்ஸில் சிறிதுபாகம் ரக்ஷகமாயுள்ள கவசமாக மாறி நம்மை ரக்ஷிக்கும். நித்திரைக்குமுன் பிரதிதினமும் கெட்ட சங்கல்பங்கள் மனதினிடம் ஜனிககா திருக்கும்படிக்கும் கெட்ட தேஜஸ் நம்மை தாக்காம லிருக்கும்படிக்கும் பிரார்த்திக்க வேண்டும்.

எவர்கள் தினந்தினம் பூததயையை அப்யஸித்து பரிசுத்தேஜஸை அபிவிருத்திசெய்து கொள்ளுகிறார்களோ

அவர்களுடைய தேஜஸ் அதிவேகமாய்ச் சுற்றும் சக்கரமானது அதன்மேல் விழும் வஸ்துக்களை தூரத்தில் உதரி எரியுமாபோல் எவ்வித துஷ்ட தேஜஸையும் அணுகாவண்ணம் அடித்துத் துரத்தும். ஆகையால் இடைவிடாத சர்வபூதஹிதமாயுள்ள நிஷ்டையை விட பெரிய ரக்ஷககவசம் எதுவுமில்லை. ஆனதுபற்றியே பக்தன் அபார பூததயையை அருளும்படிக்கு ஸ்ரீகிருஷ்ணனை பிரார்த்திக்கிறான் (பாகவதம் தசமஸ்கந்தம்).

தேஜஸ்விற்கு வேறொரு தர்மம் இருக்கிறது. காந்தக்கல் ஊசிகளை எல்லாப்பக்கங்களிலிருந்து தன்னிடம் இழுத்துக்கொள்ளுமா போலும், சுபாவமாகவே காக்கைகள் ஒரு கூட்டமாகவும் கிளிகள் ஒரு கூட்டமாகவும் பக்ஷிகள் தம் தம்ஜாதிப்பக்ஷிகளை ஆகர்ஷித்துக்கொள்ளுமா போலும் தேஜஸ்விற்கு ஒரு ஆகர்ஷண சக்தி இருக்கிறது. ஒருவனுக்கு மனதில் கோபம் ஜனிக்கின் அவன தேஜஸ் கோபதேஜஸ்ஸாக மாறும். ஒரு துஷ்டன் இதர துஷ்டர்களை தன்னிடம் சேர்த்துக்கொள்ளுமா போல் அவ்விதம் கோபி எல்லாப்பக்கங்களிலிருந்து இதர கோபிகளுடைய கோபதேஜஸ்ஸை ஆகர்ஷித்துக்கொள்ளுகிறான். ஆனதுபற்றி அவனுடைய கோபதேஜஸ்விருத்தியாகிறது. அவன் கோபம் இன்னும் அதிகரிக்கும். இவ்விதசமயத்தைப்பார்த்துக்கொண்டிருந்து இப்பிரபஞ்சத்தில் முந்தினஜன்மத்தில் விசேஷகோபிகளாயிருந்து மரணத்தையடைந்து பிசாசரூபத்தோடு அந்தரிக்ஷத்தில் திரிந்து தங்களுடைய கோபத்தைத்திருப்திசெய்துகொள்ள முடியாதிருக்கும் ஜீவர்கள் அக்கோபியின் சமீபத்திற்கு ஆகர்ஷிக்கப்பட்டு அக்கோபியின் மனதில் அவனுக்குத்தெரியாமலே பிரவேசித்து அவன் கோபத்தை விருத்திசெய்கிறார்கள். அக்கோபத்தை அடக்கமுடியாமல் அவன் அநேக துஷ்ட காரியங்களைச்செய்கிறான். வியபசாரியாயுள்ள ஸ்திரீயாகட்டும் புருஷனாகட்டும் இதர வியபசாரர்களுடையவும், விய

சாரர்களாயிருந்தும் மரணத்தையடைந்து பிசாசங்களாக அலைபவர்களுடையவும் தேஜஸை ஆகர்ஷித்துக்கொண்டு அடக்கமுடியாத வியபசாரவிருத்தியால் அநேக துஷ்டகாரியங்களைச்செய்து பாபராசிகளை விருத்திசெய்து கொண்டு கெட்டுப்போகிறார்கள். இவ்வண்ணமே இதர துர்க்குணங்களும் விர்த்தியாகும். ஆகையால் துஷ்டசங்கல்பங்களைக் கட்டோடே விட்டொழித்தல் வேண்டும். காமியபக்தி கோரிக்கைகளையும் ஆசைகளையும் விருத்திசெய்யும். சித்தசுத்தி ஏற்பட்டு சகலபூதங்களினிடத்தும் தயையோடு எல்லாருடைய நன்மைக்கும் சதாதியானித்துக்கொண்டு பாடுபடும் ராஜயோகிகளின் தேஜஸ் மஹா பரிசுத்தமானது. இந்த தேஜஸ் இதரராஜயோகிகளுடையவும் ரிஷிகளுடையவும் திவ்யதேஜஸை ஆகர்ஷிக்கும். இப்படிப்பட்டவர்களிடம் சூக்ஷ்ம சரீரத்தோடு ரிஷிகள், தேவர்கள் வந்து இவர்களுடைய ஹிருதயத்தில் பிரவேசித்து இவர்களின் துர்வாசனைகளை நசிக்கச்செய்து இவர்களிடம் பக்திஞான ஆநந்தங்களை விருத்தி செய்வார்கள். இப்படிப்பட்டவர்கள் கிரமக்கிரமமாக ஈசுவரஸ்வரூபர்களாவார்கள்.

(தொடரும்.)

ஏ. நஞ்சுண்டப்பா.

நன்மொழி.

அப்பன் வருதருணமிதேயையமிலைகண்டா யஞ்சாதே யஞ்சாதேயகிலமிசையுள்ளார்க் கெய்ப்பறவே சத்தியமென் றுரைத்திடுநின்னுரைக்கோரளவும் பழுதுவராதென்னிறைவாவாணை, இப்புவியோ வானகமும் வானகத்தின் புறத்தும் எவ்வுயிரும் எவ்வெவரும் எத்திமகிழ்ந்திடவே, செப்பமுறு திருவருட்பேரொளிவடிவாய் களித்தே செத்தாரை யெழுப்புதல் நாததிண்ணமுணர் மனனே திருவருட்பா.

புத்தக வரவு.

மனத்திற் றுறுத்தும் மதிவிளக்கம் (லோகோபகாரி பிரசுரம்) வித்யாவதாரம் பி பொன்னுவேற் பிள்ளையவர்களால் எழுதப்பட்டது. விலை அணா 4. வேண்டுவோர் சென்னை கோமளேசுவரன் பேட்டை லோகோபகாரி ஆபீஸில் பெறலாம். இது 78 பக்கங்களில் 156 நீதிகளை யடக்கிய சிறு புத்தகம். லோகோபகாரிப் பத்திரிகையில் நாளடைவில் கொஞ்சங் கொஞ்சமாக மேற் கூறிய தலைப்பின் கீழ் வெளிவந்த நீதி மொழிகள் இச்சிறு புத்தகத்தில் சேர்த்து பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அச்சுப் பிழையின்றி வெகு அழகாக நல்ல தாளில் அச்சிட்டும் நல்ல தமிழ் நடையில் எழுதப் பட்டும் இருக்கும் இந்த புத்தகத்தை வாசித்துப் பார்க்க மிகவும் சந்தோஷமடைந்தோம். இதில் கூறப்பட்ட புத்திமதிகள் அநேகமாக லோகவியவகாரத்தில் உபயோகப்படக் கூடியவைகளாயிருக்கின்றன. ஆனால் சில இடங்களில் இரண்டு பக்கங்கள் மூன்று பக்கங்களுக்கு ஒரே வாக்கியமாக துயர்ந்திருப்பது கூறப்பட்ட கருத்தை படிப்போர் கிரஹிப்பதற்கு சிரமமுண்டாக்கக்கூடியது. மேலும் ஸ்திரீகளைக் குறித்துக் கூறப்பட்ட வசனங்கள் அவர்களை யிழித்துக் கூறுவனவாகவே யிருக்கின்றன. புருஷர்கள் கெடுவது ஸ்திரீகளுடைய தவறுதல் என்றும், புருஷர்கள் ஸ்திரீகளைக் கெடுப்பது கிடையாது போலும், ஸ்திரீகள் தவறுவது இயல்பு என்றும் பற்பல இடங்களில் கூறியிருப்பதும் நியாயத்திற்கும், உண்மைக்கும் விரோதமாயிருப்பதோடு இதைப் படிக்கும் ஸ்திரீகளுடைய உயர் நோக்கங்களை யுற்சாகப்படுத்தக் கூடியதாக இல்லை. ஒரு வேளை கெட்ட நடத்தையுடைய பெண்களைப் பற்றி இது கூறப்பட்டதெனின், கெட்ட நடையுள்ள புருஷனைப் பற்றி யவனமே பேசியிருப்பதைக் காணோம். ஒவ்வொரு ஜீவனுடைய சுபாவமும் இருவகைப் பட்டது ஒன்றுமேல் நோக்கியது. மற்றொன்று கீழ் நோக்கியது. உண்மையாக ஒவ்வொரு ஜீவனுக்கும் நல்ல சுபாவமானது தான் இயற்கை. ஆனால், அறிவீனத்தாலும் கெட்ட பழக்கத்தாலும், நல்ல கருத்தைக் கொண்டுசெலுத்தும் மனோவலியின்மையாலும் ஜனங்கள் கெட்ட சுபாவமுள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள். ஆகையால் மக்களுக்கு நற்புத்தி புகட்ட முன் வருவோர் கூடுமான வரை ஜீவர்களின் நல்ல சுபாவத்தை உற்சாகப்படுத்துவது சிலாக்கியம். இக்காலத்தில் ஸ்திரீகளுக்கும் உண்மையான நல்ல சுபாவமுளது, அதை விருத்திக்குக் கொண்டுவருவது அவர் கடமை யென்று வற்புறுத்துவது நியாயமே யொழிய, அவர்கள் தான் முக்கியமாய் கெட்ட சுபாவமுடையவர் என்று கூறுவது சிலாக்கியமில்லை, யென்பது எமது துணிபு.

சர்வதேள் விஷ சஞ்சீவி

கதறிவந்தவன் களிப்புடன் செல்வான்!

விஷந்தீண்டினவன் நிமிஷத்திற் குணமடைவான்!!

குணமில்லாவிட்டால்

ரூபாய் 100 இனும் கொடுக்கப்படும்!!!

நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்திரவம் பொறுக்க முடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டு விசனமுற நேரிடுவதைப்பற்றி,நாம் அதிககஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்தமருந்து கண்டுபிடித்திருக்கிறோம் இது அநேக ஐரோப்பியடாக்டர்களாலும், தமிழ்வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப் பெற்றது. எமது மேற்கண்ட லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷசஞ்சீவியை தேள் கொட்டினஇடத்தில் உபயோகிக்க உடனேஒன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச்செய்யும். இவ்விஷ சஞ்சீவியை இன்னும் எலி,நாய் பூரான், செய்யான், பாம்பு, நண்டு, துறக்கா முதலிய எவ்வித விஷ ஜெந்துக்கள் தீண்டினபோதிலும், டைரக்ஷனில் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குண மடையலாம்,

மேற்சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்துவிடப்படும்.

இந்த லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப் பற்றுங்கள், இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. ஏனென்றால், ஓர் மனிதனை இரவில் 12 மணிக்கு நித்திரையில் விஷந்தீண்டிவிட்டால்,அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைப்பட அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும பயன்படாமற போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லததிலும அவசியம் இருக்கவேணடியது.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

	ரூ அ பை
விலை பாக்கெட் 1-க்கு ரூ	0—8—0
டசன் 1-க்கு ரூ	5—0—0

விலாசம்:—வி. எ. எஸ். பாணி,

நெ. 3. இருளப்பன் தெரு, மதராஸ்.

எங்களைப்பற்றி

என்ன சொல்லுகிறார்கள்?

ஆந்திரா, இந்த ஔஷதாலயம் இந்தியாவில் மிகப்பெரிதென்றே சொல்லவேண்டும்.

திராவிடாபிமானி, இவர்களின் அபிவிர்த்திக்கு மருந்துகளின் சற்குணமே காரணம்.

பெண்கல்வி, அவர்களுடைய பொதுமையேதான் வியாபாரத்தை அதிகப் படுத்துகிறது. இப்பொழுது உலகெலாம் பரவுகிறது.

ஞானபானு, இந்த ஔஷதாலயம், "பொறுமையுடையார் பூமியாள்வார்" என்பதற்குப் போதுமான அத்தாட்சியாயிருக்கிறது.

கலைமகள், இவர்கள் வியாபாரத்தைக் கவனிக்கும்போது அளவற்ற அற்புதமான மருந்துகள் வைத்திருக்கிறதாய் விளங்குகிறது. அவர்களின் பிரசித்திக்கு மருந்தின் குணந்தான் காரணம் என்று திட்டமாய்ச் சொல்லுகிறோம்.

இவ்விதமாகவும் இன்னும் அதிசமாகவும் இந்தியாவிலுள்ள சுமார் 21? பத்திரிகைகள் புகழ்கின்றன. யாரைப்பற்றி யென்று நினைக்கிறீர்கள்?

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயத்தைப்
பற்றியேதான்.

விபரமான கியாட்லாக்கை விரும்புவோர் விலாசத்தைத் தெரிவித்தால் இனமாய் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜீ

ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்.

45மேலக்கோபுரவீதி, மதுரை.